

# தமிழரசு

நவம்பர் 1–15, 1998









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


❋ எரிசக்தி மாநாடு ........ 2

❋ நெடுஞ்சாலைகள் மேம்பாடும் பாரமரிப்பும் ........ 6

❋ மனிதத்தை வாழவைப்போம் ........ 8

❋ கூட்டுறவுத் துறையின் சாதனைகளும் திட்டங்களும் ........ 9

❋ உலக சிக்கன நாள் ........ 14

❋ கூட்டுறவே நாட்டுயர்வு ........ 15

❋ பண்டித நேருவும் வெளியுறவுக் கொள்கைகளும் ........ 17

❋ கூட்டுறவு வீட்டு வசதி இணையம் ........ 22

❋ காத்திருந்த வேளையில் ........ 24

❋ தாய்ப் பால் ........ 30

❋ தெரிந்துகொள்வோம் ........ 32

❋ நீர் ஆதாரம் : நீர் ஆய்வு மையத்தின் பங்கு ........ 33

❋ தற்கால வெளிப்பாடு : தமிழ் அழகியல் ........ 37

❋ ஊராட்சி ஒன்றிய நிலைக்குழுக்கள் ........ 40

❋ பனைவெல்லம் – தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ........ 41

❋ எங்கள் ஊர்ப் பிரச்சினை ........ 43

❋ பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ........ 47



# தமிழரசு

திருவள்ளுவராண்டு 2029

ஐப்பசி

நவம்பர் 1–15, 1998

மலர் : 30 இதழ் : 9

விலை ரூ.3


## திருக்குறள்

*ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்.*

ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

– கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...


__முதல் பக்க அட்டையில்__

எரிசக்தி மாநாடு : 1998

__கடைசிப் பக்க அட்டையில்__

கூட்டுறவே நாட்டுயர்வு

# எரிசக்தி மாநாடு 1998

எரிசக்தி மாநாடு 1998-ன் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைக்குரிய இந்த சென்னை மாநகரில் தொடர்ந்து மூன்றாவது முறையாக இம்மாநாடு நடைபெறுவது நிறைந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. 1996ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற எரிசக்தி மாநாட்டினைத் தொடங்கி வைத்ததையும் இவ் வேளையில் நினைவு கூர்கிறேன்.

வெப்பம் சார்ந்த எரிபொருள் ஆயினும் (அல்லது) மின்சாரம் ஆயினும், எரிசக்தி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானதாகும்.

- எரிசக்தியின் ஆற்றல் அல்லது நிர்வாகம்
- மின்துறையின் கொள்கையை வரையறுத்தல்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
- ஆகிய தலைப்புகளை இம்மாநாட்டின் மையப் பொருளாகத் தேர்வு செய்தமைக்காக இந்திய தொழில் கூட்டமைப்பினை நான் பாராட்டு கிறேன்.

எரிபொருள் சிக்கனக் கொள்கை வளர்ந்து வருவதைத் தொடர்ந்து, குறைந்த அளவில் எரிபொருள்களைப் பயன்படுத்தி, அதிக அளவில் உற்பத்தி செய்யும் முயற்சிகளில் வளர்ச்சி பெற்ற நாடுகள் ஈடுபடத் தொடங்கியுள்ளன. இந்நாளில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில், தொழில் வளர்ச்சியின் முக்கிய காலங்களில் சுற்றுப்புறம் விரைந்து மாசுபடுவதைக் காணலாம். வளர்ந்து வரும் நாடுகள், சுற்றுப்புறம் இவ்வாறு மாசுபடுவதை எந்த அளவுக்குத் தடுக்க முடியும்? எரிசக்தி பயன்பாடு, தொழில் உற்பத்திகள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் மாசுகளை பணக்கார நாடுகள் தடுப்பதில் பின்பற்றிய முறைகளிலிருந்து எந்த அளவுக்கு இவை பயன்பெற முடியும்? நிலையான வளர்ச்சியில் கவனம் செலுத்தும் போது, நமக்கு இது, தற்போது மிகவும் சிக்கலாக உள்ளது. இங்கு வருகை புரிந்துள்ள அறிஞர் பெருமக்கள், இப்பொருள் குறித்து விவாதிக்க வேண்டுமென்பது என் ஆழ்ந்த விருப்பமாகும். பொருளாதார வளர்ச்சியும் உயர்ந்த சுற்றுப்புறச் சூழல் நிர்வாகமும் இதில் கவனிக்கத்தக்க அம்சங்களாகும்.

இந்த மையக் கருத்துக்கள் அனைத்தும் பொதுவாக நமது நாட்டிற்கும், குறிப்பாக நமது தமிழகத்திற்கும் மிகவும் முக்கியமானதாகும். இவை, எரிசக்தி ஆற்றல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள இடைவெளியை குறைப்பதற்குரிய பயன்தரத்தக்க வழிகள்.

புகழ்பெற்ற தொலைநோக்காளர் ஆல்வின் டோஃப்ளர், தமது, மூன்றாவது-அலை (The Third Wave) என்னும் நூலில், இரண்டாவது-அலை புதுப்பிக்கவியலாத எரிசக்தி அடிப்படையிலான வழிமுறைகள் என்கிறார். அது மிக அடர்த்தியான, முற்றிலும் தீர்ந்து போகக்கூடிய பொருளிலிருந்து கிடைப்பதாகும். செலவு நிறைந்து, ஒருங்கிணைந்த தொழில் நுட்பங்களைக் கொண்டது. மாற்றிக்கொள்ள இயலாதது; சில குறிப்பிட்ட வளங்களையும், முறைகளையும் சார்ந்தது. தொழில் வளர்ச்சி யுகத்தில் இரண்டாவது - அலை நாடுகளில் எல்லாம், இவை எரிசக்தி அடிப்படையின் முக்கிய அம்சங்களாகும். ஆனால், நிலத்திற்கு அடியில் புதைந்து கிடக்கும் எரிபொருள், தீர்ந்து போவதற்குரிய காலம் நெருங்கிக் கொண்டுள்ளது; தீர்ந்து போகக்கூடிய வளங்களைப் பற்றி அல்லாமல், புதுப்பிக்கத்தக்க வளங்களைக் கொண்டு மூன்றாவது - அலை எரிபொருள்களைப் பெறுவது தொடர்பாகக்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் சென்னையில், 11-11-1998 அன்று தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

குறிப்பிடுகிறார். அடர்த்தியான எரிபொருள்களைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, விரிவான அளவிலான பல்வேறு வளங்களிலிருந்து அது பெறப்பட வேண்டும். ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்களைக் கொண்டு பெறுவதற்குப் பதிலாக, அது ஒருங்கிணைந்ததும் தனித்தனியானதுமான அமைப்புகளின் மூலம் பெறுவதாக அமைய வேண்டும். மேலும், குறிப்பிட்ட சில முறைகளை மட்டுமே சார்ந்திராமல், வேறுபட்ட பல புதுமையான முறைகளின் மூலம் பெறத்தக்கதாயும் இருக்க வேண்டும். பல்வேறு தேவைகளையும் ஈடு செய்யக்கூடியதாய், குறைந்த அளவு சேதாரங்களைக் கொண்டதாய் அமைய வேண்டும். காற்று சக்தி, நிலக்கரி சக்தி, எரிசக்தி முதலியவைகளுக்கு மிக அதிகமான வாய்ப்புகள் உள்ளன.



நமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள சில முதன்மையான எந்திரக் கருவி உற்பத்தியாளர்கள், தங்களுடைய பொருள்களை இங்குள்ள அரங்கில் பார்வைக்கு வைத்துள்ளார்கள். இது, நாடு முழுமையிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல தொழிலதிபர்களை ஈர்க்கும். எரிசக்திகளைப் பயன்படுத்துபவர்களும், எந்திரக் கருவிகளை உற்பத்தி செய்பவர்களும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கு இது சிறந்த வாய்ப்பினை வழங்கும் என நம்புகிறேன். நாட்டுக்குத் தேவையான எரிசக்தி ஆற்றல், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவைகளுக்கு இவர்கள் தங்கள் பங்கினைச் செலுத்த இயலும்.

தமிழ்நாடு அரசு, தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கும் பொருத்தமான முதலீட்டாளர் நட்புறவுச் சூழ்நிலையை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது. தொழில் வளர்ச்சி போதுமான அளவில் மின்சாரம் கிடைப்பதைச் சார்ந்திருப்பதால், நாங்கள், மின்சார உற்பத்தியைப் பெருக்கிட இயன்ற வழிகளிலெல்லாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மின் உற்பத்தியில் தமிழகத்தின் தற்போதைய நிறுவு திறன் 6917 மெகாவாட். அதிகபட்ச உற்பத்தி இதுவரை 4965 மெகாவாட். தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்டுள்ள மின்சார உற்பத்திக்கான ஆலோசனைக் குழு (Working Group on Power) மின் உற்பத்தியில் ஆண்டுக்கு 10 விழுக்காடு வளர்ச்சி அடிப்படையில் திட்டமிடுகிறது. இந்த அடிப்படையில், 2006-2007ஆம் ஆண்டு முடிவில், தமிழகத்தின் உச்சகட்ட மின்தேவை 13 ஆயிரம் மெகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தற்போதைய மின் உற்பத்தியை நாங்கள், 2007ஆம் ஆண்டில் இரு மடங்காக உயர்த்திட வேண்டும்.

3000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய பல மின் திட்டங்களை தற்போது நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அத்திட்டங்களில், பேசின் பிரிட்ஜ் டீசல் எஞ்சின் மின்திட்டம் 200 மெகாவாட் மின்சாரத்தையும், பார்சன்ஸ் வாலி நீர் மின்திட்டம் 30 மெகாவாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்யும்.

அடுத்துவரும் பத்தாண்டுகளில் ஏற்படும் மின்தேவையையும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, 2000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய திரவ எரிவாயு அடிப்படையிலான மின் திட்டம் ஒன்றை எண்ணூரில் அமைப்பதற்காக, உலக அளவிலான போட்டி ஏலத்தின் மூலம் தொழில் முகவரைத் தேர்வு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இத்திட்டம் 2004ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தமிழகத்தில் அதிக அளவில் கிடைக்கும் நிலக்கரியைப் பயன்படுத்தி, 1500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஜெயங்கொண்டம் நிலக்கரி மின் திட்டத்தைத் தொடங்கிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம். இத்திட்டம், 2003ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவை தவிர வேறு பல மின் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன. இவைமட்டுமல்லாமல் பல தனியார் மின்திட்டங்களும் நிறைவேற்றப்பட உள்ளன. அவை ஒன்பது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் நிறைவேற்றப்படும். இத்திட்டங்கள் அனைத்தின் மூலமும் 6000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

> **"பத்தாண்டுகளில் ஏற்படும் மின்தேவையையும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, 2000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய திரவ எரிவாயு அடிப்படையிலான மின் திட்டம் ஒன்றை எண்ணூரில் அமைப்பதற்காக, உலக அளவிலான போட்டி ஏலத்தின் மூலம் தொழில் முகவரைத் தேர்வு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்."**

உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேவைப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்லும் போதும், விநியோகம் செய்யும் போதும் ஏற்படுகின்ற சேதாரம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 17.3 விழுக்காடு. இதனை தேசிய அளவிலான சேதாரம் 23 விழுக்காட்டுடன் ஒப்பிடும் பொழுது, இது மிகவும் குறைவானதாகும்! எனினும் இதில் நாங்கள் திருப்தியடையவில்லை! புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இந்த இழப்பினை மேலும் குறைத்திட வழிவகைகளை மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கெனவே இப்பணியில் ஈடுபட்டுள்ளது. வரும் 9வது திட்ட கால இறுதிக்குள்ளாக இந்த இழப்பினை 15 விழுக்காடு அளவிற்குக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு மின்வாரியத்தைப் பொறுத்தமட்டில் தனது நிறுவு திறனிலிருந்து முழு அளவில் மின்உற்பத்தியினைப் பெருக்குவதற்கான முயற்சியிலே தன்னை எப்பொழுதும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கும் மின்சாரம் 1997-98ஆம் ஆண்டில் 67.96 விழுக்காடாக இருந்தது. தூத்துக்குடி, மேட்டூர் ஆகிய அனல் மின்உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் எப்பொழுதும் நம்நாட்டின் தேசிய சராசரியினைவிட அதிகமாகவே இருந்துவருகிறது. எண்ணூர் அனல் மின்நிலையத்தை தமிழ்நாடு மின்வாரியம் முழு அளவிலும் விரிவான முறையிலும் புதுப்பித்து வருகிறது. 1999-2000ஆம் ஆண்டிற்குள் இப்பணி முழுமையாக நிறைவேற்றப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் இந்நிலையத்தின் மின்உற்பத்தி 75 விழுக்காட்டினை எட்டும்.

திரவ எரிபொருள் மூலம் மின்உற்பத்தி செய்யும் 20 தனியார் மின்உற்பத்தித் திட்டங்களை நிறுவிட எங்களது அரசு திட்டமிட்டுள்ளது. பெருகிவரும் மின்தேவையை குறுகிய காலத்தில் ஈடு செய்வதற்கு இத்திட்டங்கள் பயன்படும். இவற்றிற்குரிய தொழில் முகவர்களைத் தேர்வு செய்திட பன்னாட்டு போட்டி ஏல முறையில் முற்றிலும் ஒளிவு மறைவற்ற அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருகிறோம். அதற்கான நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. எனினும் 800 மெகாவாட் மின்உற்பத்தி செய்திடும் ஏழு திட்டங்களுக்கு மட்டும் தேவையான அளவு திரவ எரிபொருளை வழங்கிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள 13 திட்டங்களுக்கும் திரவ எரிபொருளைப் பெற்றிட எங்கள் அரசு முழு அளவிலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அனைத்து உயரமுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றில் எரிசக்தி

தணிக்கை திட்டங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். எரிசக்தி பாதுகாப்பு இலக்கினை எய்துவதற்கு இது ஒரு முன்னேற்ற நிலையாகும். இதில் நிறைவு காணும் முயற்சியில் தமிழ்நாடு மின்வாரியம் தீவிர கண்காணிப்புடன் செயல்படுகிறது. தமிழ்நாடு மின்வாரியமும், இந்தியத் தொழில் நிறுவனமும் இணைந்து எரிசக்தி தணிக்கைத் திட்டத்தினை மேற்கொள்வதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகள் பயன்பெறும் என உறுதியாக நம்புகிறேன்.

எரிசக்தி பாதுகாப்பில் எங்கள் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. எரிசக்தி பாதுகாப்பு, மூலதனச் செலவைக் குறைக்கும் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்துள்ளோம். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பினை சிறந்த முறையில் நிர்வகித்திட இது உதவும்.

இதன்மூலம், புதுப்பிக்கப்படும் எரிசக்தி உற்பத்தித் திறனைப் பொறுத்தமட்டில் காற்றலைகள் மூலம் மின்உற்பத்தி செய்வதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. புதுப்பிக்கப்படும் எரிசக்தி மேம்பாடு அடைவதற்காக, இதன்மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை வாங்குவதற்கும் விநியோகம் செய்வதற்கும் ஆக்கபூர்வமான முறையில் தமிழக மின்வாரியம் ஊக்கமளித்து வருகிறது. தமிழகத்தில் காற்றாலைகள் மூலம் 2000 மெகாவாட் உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. தற்போது ஏறத்தாழ 700 மெகாவாட் மின்சாரம் இதன்மூலம் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகம் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக காற்றாலைகள் மூலம் மின்உற்பத்தி செய்வதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. சூரிய சக்தியைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 165 கிலோ வாட் மின் உற்பத்தி செய்தற்கு ஏற்ப உரிய சாதனங்கள் (Photovoltic Cells) ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன.

சர்க்கரைத் தொழிற்சாலைகளில் மின்உற்பத்தி செய்யப்படுவதை ஊக்கப்படுத்தும் ஒரு சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். பல சர்க்கரை ஆலைகள், மின்சாரத்தை உற்பத்தி செய்து மின்வாரியத்திற்கு வழங்கி வருகின்றன. இது, தமிழக அரசு அளிக்கும் ஊக்கத்தின் காரணமாக நடைபெறுகிறது. அண்மையில், இந்திய குத்தகை மற்றும் நிதி நிறுவனத்துடன் (IL&FS) இணைந்து, தமிழக சர்க்கரை ஆலைகள் மூலம் மேலும் 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திட ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம்.

இறுதியாக, இம்மாநாட்டிற்கென்று தேர்வு செய்யப்பட்டுள்ள பொருள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது என்றே நான் கூறுவேன். அடுத்துவரும் நான்கு நாட்களில் நடைபெறும் விவாதங்களின் அடிப்படையில் அளிக்கப்படும் பரிந்துரைகள் எங்களுடைய தமிழக அரசுக்குப் பெரிதும் உதவியாக அமையும். அந்தப் பரிந்துரைகளை நாங்கள் கவனத்தில் கொண்டு முடிவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்வோம். சீராக எரிசக்தியைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அவை எங்களுக்கு உதவும்.

**"தமிழ்நாடு அரசு, தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கும் பொருத்தமான முதலீட்டாளர் நட்புறவுச் சூழ்நிலையை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது. தொழில் வளர்ச்சி போதுமான அளவில் மின்சாரம் கிடைப்பதைச் சார்ந்திருப்பதால், நாங்கள், மின்சார உற்பத்தியைப் பெருக்கிட இயன்ற வழிகளிலெல்லாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்".**

எரிசக்தித் துறையில் முதலீடு செய்வதற்கு இந்தியத் தொழில் முதலீட்டாளர்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முன்வர வேண்டுமென மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். எங்களுடைய அரசு தொழில் முதலீட்டாளர்களுக்குத் தேவையான ஆதரவினையும், உதவிகளையும் வழங்கத் தயாராயுள்ளது என்பதனையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெற வாழ்த்துகள் மொழிந்து, இந்த 1998ஆம் ஆண்டு எரிசக்தி மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். □

# நெடுஞ்சாலைகள் மேம்பாடும் பராமரிப்பும்

சாலைகள், விவசாயத் தொழில் வளர்ச்சி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குத் தூண்டுகோலாக இருப்பதை தமிழக அரசு கருத்தில் கொண்டு சாலைகள் மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்கு அக்கறை செலுத்தி வருகிறது.

தற்பொழுது மொத்தம் 58,846 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலை | 2,562 கி.மீ. |
| மாநில நெடுஞ்சாலை | 5,133 கி.மீ. |
| பெரிய மாவட்டச் சாலை | 10,331 கி.மீ. |
| இதர மாவட்டச் சாலை | 40,820 கி.மீ. |

1996-97ஆம் ஆண்டு திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கு ரூ.440 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 1997-98ஆம் ஆண்டில் ரூ.674 கோடியாகவும், நடப்பு நிதியாண்டில் ரூ.831 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

அடிப்படைக் கட்டுமானப் பணிகளின் அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறைக்கென தனியாக அமைச்சரையும், ஒரு செயலாளரையும் உருவாக்கியுள்ளார்கள். இது இந்தியாவில் முன்னோடியாகும்.

1996-97, 97-98 மற்றும் 98-99ஆம் ஆண்டுகளில் திட்டப் பணிகளின் கீழ் 85 பாலங்கள் 191 கி.மீ. சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப் பட்டு 38 பாலங்கள் 60 கி.மீ. சாலைப்பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1996ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளை தற்காலிக சீரமைப்பிற்கு ரூ.32 கோடி ஒதுக்கியதுடன், 8 மாவட்டங்களில் 1,543 கி.மீ. சாலைகளை நிரந்தரப் பழுது பார்த்திட ரூ.150 கோடி செலவில் முடிவுறும் தருவாயில் உள்ளன. இப்பணிகள் யாவையும் கனரக இயந்திரங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன.

ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட 166 கி.மீ. நீள சென்னை-கடலூர் கிழக்கு கடற்கரைச்சாலை பணிகள் முடிக்கப்பட்டு 14-1-98 அன்று போக்குவரத்திற்கு அனுமதிக்கப் பட்டது.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.64.12 கோடி மதிப்பீட்டில் நான்கு ரயில்வே மேம்பாலப்பணிகள் மற்றும் 27.20 கி.மீ. மதுரை புறவழிச்சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதுவன்றி ஆறு ரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலம் பணிகள் ரூ.33.40 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

திருப்பூர் நகருக்கு ரூ.35 கோடி செலவில் சுற்றுச்சாலை மற்றும் ரூ.19 கோடி செலவில் திண்டிவனம் நகரில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று முன்னேற்றத்தில் உள்ளன.

சென்னையைச் சுற்றியுள்ள நகர்ப்புறங்களிலிருந்து சென்னையை வந்தடையும் 210 கி.மீ. நீளமுள்ள பல்வேறு சாலைகளை ஹட்கோ நிதியுதவியுடன் ரூ.212 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் திட்டம் 1999ஆம் ஆண்டு செயல்படுத்திடப்படும்.



நகர்புறத்தில் மட்டுமின்றி கிராமப்புற சாலை வளர்ச்சியிலும் நெடுஞ்சாலைத் துறை அக்கறை செலுத்தி வருகிறது.

தமிழகத்தில் 28 மாவட்டங்களில் 3,189 கி.மீ. பெரிய/இதர மாவட்டச் சாலைகளையும், இணைப்பின்றி உள்ள மேற்கு கடற்கரைச்சாலை மேம்பாட்டுப் பணிகளையும் மற்றும் 54 பாலங்கள் நபார்ட் வங்கி உதவியுடன் ரூ.283 கோடி மதிப்பில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு 1,816 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

471 கிராமங்களுக்கு, 3,410 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் அமைத்திட ரூ.219 கோடி செலவில் திட்டமிடப்பட்டு பணிகள் 1996-97ல் துவங்கி இதுவரை 1,602 கி.மீ. சாலை முடிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாடு, விவசாய சந்தை மையங்களுக்கு சாலை வசதி போன்ற சிறப்புத் திட்டங்கள் தீட்டி நெடுஞ்சாலைத்துறை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் உள்ள சாலைகளில் சுமார் 1,500 கி.மீ. சாலைகள் ஏனைய நாடுகளில் உள்ள சாலைகளின் தரத்திற்கு ஈடாக ரூ.950 கோடி மதிப்பில் உலக வங்கி உதவியுடன் மேம்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கடலூர் முதல் தூத்துக்குடி வரை தள ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1999-ஆம் ஆண்டு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.



சாலை வளர்ச்சிப் பணிகளில் அரசின் நிதி ஆதாரம் ஒன்றினை மட்டும் அடிப்படையாக கொள்ளாமல், தனியார் முதலீட்டினையும் ஊக்குவித்திடும் வகையில், கோயம்புத்தூர் புறவழிச்சாலை, சென்னை-கல்கத்தா சாலையில் காரனோடை பாலம் தனியார் முதலீட்டில் செயல்படுத்தப்படுகின்றன.

கடந்த 50 ஆண்டுகளாக தமிழக சாலைகளில் கட்டிய/திரும்பக் கட்டிய பெரிய பாலங்கள் 195 மட்டுமே. கி.பி.2000ஆம் ஆண்டு முடியு முன் இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ.350 கோடி மதிப்பீட்டில் தமிழகம் முழுவதும் 106 பாலங்களை திரும்பக் கட்டிடும் சிறப்பான திட்டத்திற்கு அரசு செயல் வடிவம் கொடுத்து, 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பணிகள் துவங்க உள்ளன.

சாலைகளின் பராமரிப்பினை செவ்வனே செய்திட தமிழக அரசு 10,000 சாலைப்பணியாளர்களை நியமித்துள்ளது.

பெருகிவரும் தேவைகளுக்கு ஏற்ப தரம் வாய்ந்த சாலைகள் அமைத்து பராமரித்திட நெடுஞ்சாலைத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. □



மற்றவர்கள் திட்டினால் மனம் பதைக்கக் கூடாது; ஏனெனில் அந்தத் தூற்றல் வெறும் குப்பை. அந்தக் குப்பையும் நம் கழனியை வளர்க்கும் எருவாக மாறக்கூடும்.

– அறிஞர் அண்ணா

# மனிதத்தை வாழவைப்போம்

பாவலர். கருமலைத் தமிழாழன்



சாதிவெறி தீயுமிழ்ந்து குருதி நீரால்
சாதியெலாம் பொங்குவதா மனிதப் பொங்கல்
நாதியற்று மனிதநேயம் நலிந்து போக
நாளெல்லாம் பொங்குவதா சண்டைப் பொங்கல்
மோதியிங்கே தமிழர்தம் இனத்திற் குள்ளே
மேலெழுந்து பொங்குவதா காழ்ப்புப் பொங்கல்
வீதியெலாம் சமத்துவத்தில் கரங்கள் கோத்து
விளைத்திடுவோம் நெஞ்சினிலே அன்புப் பொங்கல்!

வன்முறைகள் தலைவிரிக்க நாளும் கொள்ளை
வளர்த்திங்கே வீழ்த்துகின்றோம் அமைதி தன்னை!
நன்முறைகள் தலைகுனிய ஒழுக்கம் தாழ
நலிவுகளைப் பொங்குகின்றோம் நன்மை என்றே!
தன்நலங்கள் தலைநிமிரப் பொது நலத்தைத்
தளையிட்டு மனச்சிறையில் அடைத்து வைத்தோம்!

துன்பங்கள் துடைத்தெறியும் துணிவே யின்றித்
துவண்டிங்கே அறிவுதனை அடிமை செய்தோம்!

பூவிரிக்கும் பேச்சொழித்துப் புன்மை தீர்க்கும்
புத்தெழுச்சி நெஞ்சினிலே பூக்க வைப்போம்!
நாவிரிக்கும் தேன்மொழியின் பசப்பு தன்னில்
நாம்மயங்கி வீழ்ந்திடாமல் விழிப்புக் கொள்வோம்!
தீவிரிக்கும் கயமைகளில் தீய்ந்தி டாமல்
தீரமுடன் எதிர்க்கின்ற உறுதி கொள்வோம்!
மாவிரிக்கும் நறுமணமாய் மனித நேய
மணம்பரப்பி மனிதத்தை வாழ வைப்போம்!





# கூட்டுறவுத் துறையின் சாதனைகளும் திட்டங்களும்

மாண்புமிகு உணவு–கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு.கே.என். நேரு

கூட்டுறவு இயக்கத்திற்கு இந்தியாவிலேயே முன்னோடியாகத் தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றன.

தமிழகத்திலுள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணை புரிகின்றன.

"எங்கும் கூட்டுறவு, எதிலும் கூட்டுறவு" என்கின்ற வகையில் தமிழக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து கூட்டுறவுச் சங்கங்கள் அரும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.

1904–ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் 'திரூர்' என்ற கிராமத்தில் தொடங்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம், இன்றைய தினம், "ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர்விட்டு, சுமார் 27,000–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னகத்தே கொண்டு அளப்பரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

தமிழக விவசாயிகளுக்கு நடப்பு நிதியாண்டில் (1998–99) கடன் வசதி விவரம்:

| | | ரூ.(கோடியில்) |
|---|---|---|
| குறுகிய காலக் கடன் | : | 925.00 |
| மத்திய காலக் கடன் | : | 100.00 |
| நீண்ட காலக் கடன் | : | 248.60 |
| நகைக் கடன் | : | 3400.00 |
| பண்ணை சாராக் கடன் | : | 130.00 |

வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த 30–9–98 வரை

| | | ரூ.(கோடியில்) |
|---|---|---|
| குறுகிய காலக் கடன் | : | 331.00 |
| மத்திய காலக் கடன் | : | 27.13 |
| நீண்டகாலக் கடன் | : | 24.39 |
| நகைக்கடன் | : | 1344.64 |
| பண்ணை சாராக் கடன் | : | 49.77 |

கடன் வழங்கப்பட்டுள்ளன. அதைப்போலக் கடந்த இரண்டு ஆண்டுகளில்

| | 1996–97 ரூ. கோடியில் | 1997–98 ரூ. கோடியில் |
|---|---|---|
| குறுகிய காலக் கடன் | 592.40 | 697.99 |
| மத்திய காலக் கடன் | 66.32 | 100.74 |
| நீண்ட காலக் கடன் | 205.55 | 191.60 |
| நகைக்கடன் | 2535.22 | 2879.97 |
| பண்ணைசாராக் கடன் | 79.30 | 93.94 |

வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாகத் தமிழக அரசின் பொறுப்பேற்ற பின்பு 30–9–98 வரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் குறுகிய காலக் கடன் ரூ.1621.39 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.194.19 கோடியும், நீண்டகாலக் கடனாக ரூ.421.54 கோடியும் ஆகமொத்தம் ரூ.2237.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், குறுகிய–மத்திய மற்றும் நீண்டகாலக் கடன்கள் குறியீட்டில் இதுவரை வழங்கப்பட்டது போக மீதம் ரூ.891.08,கோடி வழங்கப்பட உள்ளது.

### இடுபொருள் விநியோகம்

நடப்பு நிதியாண்டில் (1998–99)

| | | ரூ. (கோடியில்) |
|---|---|---|
| உரம் | : | 280.00 |
| விதை | : | 2.50 |
| பூச்சிக்கொல்லி மருந்து | : | 5.50 |
| விவசாய உபகரணங்கள் | : | 0.95 |

வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 30–9–98 வரை

| | | |
|---|---|---|
| உரம் | : | 115.92 |
| விதை | : | ரூ.130.69 இலட்சம் |
| வேளாண் உபகரணங்கள் | : | ரூ.24.45 இலட்சம் |
| பூச்சிக்கொல்லி மருந்து | : | ரூ.100.46 இலட்சம் |



மதிப்பீட்டிற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல,

| | | 1996–97 ரூ. (கோடியில்) | 1997–98 ரூ. (கோடியில்) |
|---|---|---|---|
| உரம் | : | 209.00 | 235.00 |
| விதை | : | 2.07 | 1.69 |
| பூச்சிகொல்லி மருந்து | : | 4.68 | 2.23 |
| வேளாண் உபகரணங்கள் | : | 10.63 | 0.69 |

வழங்கப்பட்டது.

### வேளாண் விளைபொருள் விற்பனை

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளை பொருட்களை நல்ல ஆதாயத்திற்கு விற்றுத் தருகின்ற பணியினை, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் ரூ.525 கோடி மதிப்புள்ள விளைபொருட்களை விற்பனை செய்வதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் செப்டம்பர் '98 வரை 239.89 கோடி மதிப்பீட்டிற்கு விளைபொருட்கள் விற்பனை செய்து தரப்பட்டுள்ளன.

1996–97ல் ரூ.425 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்து தரப்பட்டிருக்கிறது. அதுபோல் 1997–98ல் ரூ.410.39 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வைப்புத்தொகையைப் பெற்றிருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கடந்தாண்டு முதல் வீட்டுமனை வாங்க, வீடு பழுதுபார்க்க, வீடு கட்ட மற்றும் நுகர்பொருள் வாங்க உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கி வருகின்றன.

விவசாயிகள் உற்பத்தி செய்த வேளாண் விளைபொருள்களை ஈடாக வைத்துக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் (1998–99) ரூ.70 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 30–9–98 வரையில் ரூ.10.66 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 1997–98ல் ரூ.21.80 கோடி மதிப்பிற்கு இக்கடன் வழங்கப்பட்டது.

ரூ.5 கோடி மற்றும் அதற்கு மேல் வைப்புத் தொகைகள் கொண்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பேருந்து கடன், சீருந்து கடன் (ஜீப்), மூலப்பத்திரம் ஈட்டுக்கடன், விவசாய நிலம் வாங்கக் கடன், முன் கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் திருமண நோக்கங்களுக்குக் கடன், உறுப்பினர்களின் பிள்ளைகளுக்குக் கல்விக் கடன் மற்றும் பண்ணை இயந்திர மயமாக்கும் திட்டத்தின்

கீழ் உபகரணங்கள் வாங்க ஆகியவற்றிற்குக் கடன்கள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஒரு கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேலும் வைப்புத் தொகைகள் கொண்டுள்ள வங்கிகள் பதிவு பெற்ற மருத்துவருக்குச் சுயதொழில் தொடங்க ரூ.10 இலட்சம் வரையில் கடன்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***நகரக் கூட்டுறவு வங்கிகள்:***

தமிழகத்தில் **125** நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இதற்கு 113 கிளைகள் உள்ளன. இவ்வங்கிகளில் **30.9.98**ல் வைப்புநிதி ரூ.1,661.78 கோடி உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.105 கோடியில் 30.9.98 வரை ரூ.41.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (1997–98)ல் இக்கடன் ரூ.52.09 கோடி வழங்கப்பட்டது.

தமிழகத்தில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், கரூர், பெரம்பலூர், நாமக்கல், நாகப்பட்டினம், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே செயல்படாமல் இருந்த சென்னை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம்



புனரமைக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன.

நகரக் கூட்டுறவு வங்கிகளில் வீட்டுவசதிக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 1998–99ல் ரூ.60 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 30.9.98 வரை இத்திட்டத்தின்கீழ் ரூ.37.38 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சுயதொழில் செய்ய (Professional Loan) நடப்பாண்டில் ரூ.55 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 30.9.98 வரையில் ரூ.12.87 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் நகரக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வீடு கட்ட கடன் வழங்க

கூட்டுறவு வங்கிகள், தங்க நகையீட்டின் பேரில் தனி நபருக்கு கிராம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பர்கூர், பட்டுக்கோட்டை மற்றும் திருச்சுழியில் தொழில் பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ.) நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களின் மூலம் ஆண்டுதோறும் 339 மாணவ, மாணவியர்கள் தொழிற் பயிற்சி பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள இலால்குடியில் 14 ஏக்கர் பரப்பில் கூட்டுறவு பாலிடெக்னிக் ஒன்று



ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் உருவாக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் 10 கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் சுமார் 8881 மாணவ, மாணவியர்களுக்குக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியும், 4,250 பணியாளர்களுக்கு அஞ்சல் வழிப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் 175 ஆதிதிராவிடர் மற்றும் 25 பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக உயர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு, சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 100 பேர்களுக்கும், மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 100 பேர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிக்கான தொகையை "தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும்", "தாட்கோ"வும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் இப்பிரிவு இளைஞர்களுக்குக் கூட்டுறவு அமைப்புகளில் வேலைகிட்டிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 1603 நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், கட்டப்படவுள்ள 1,698 கடைகளில், 527 கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் 30.9.98 வரை ரூ.4,168.11 கோடி வைப்பீடாக உள்ளது. அதைப்போலத் தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் 30.9.98 வரை ரூ.1920.48 கோடி வைப்பீடாக உள்ளது.

நடப்பு ஆண்டில் 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.21.43 கோடி நிதியுதவி அளிக்க குறியீடு நிர்ணயித்ததில், 30.9.98 வரையில் ரூ.9.03 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 1997–98ல் இது போன்ற நிதியுதவி ரூ.16.90 கோடி வழங்கப்பட்டது.

தமிழகத்தில் 13 செயல்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, இச்சங்கங்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்குக் கூட்டுறவின் செயல்பாடுகள், நடைமுறைகள் குறித்த "ஒரு நாள்" பயிற்சி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் அளிக்கப்பட்டது. தற்போது மத்திய வகைச் சங்கங்கள் மற்றும் மாநில வகைச்

சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, மேற்படி சங்கங்களின் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. இப்பணியை ஜனவரி '99க்குள் முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

21,245 கூட்டுறவு நியாயவிலை கடைகளும் மற்றும் 1091 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடைகள் மூலம் சுமார் 146.6 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, தமிழகத்தில் 3,419 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும், 180 மகளிர் நடத்தும் துணை சில்லரை விற்பனை நிலையங்களும், 30 நடமாடும் நியாயவிலைக் கடைகளும், 56 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களும் செயல்படுகின்றன. இதுதவிர – மீனவர் சங்கங்கள், பனைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சம்மேளனம், காதி ஆகிய அமைப்புகள் மூலம் 125 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

பழைய குடும்ப அட்டைகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 1.33 கோடி குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு 1.28 கோடி அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. இதுதவிர புதியதாகக் குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்துள்ள 24 இலட்சம் மனுக்களை ஏற்கெனவே வீடு வீடாக ஆய்வு செய்ததை மீண்டும் இரண்டாம் நிலை ஆய்வு செய்யும் பணி 26.10.98 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்ட மொத்தக் கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் 1996–97ஆம் ஆண்டில் கட்டுப்பாட்டுப் பொருள்களை ரூ.1,42,267.06 இலட்சத்திற்கும், கட்டுப்பாடற்ற பொருள்கள் ரூ.38,214.37 இலட்சத்திற்கும் விற்பனை செய்துள்ளன.

1997–98ல் கட்டுப்பாட்டுப்பொருள்கள் ரூ.1,34,196.92 இலட்சத்திற்கும், கட்டுப்பாடற்ற பொருள்கள் ரூ.49,931.87 இலட்சத்திற்கும் விற்பனை செய்துள்ளன. நடப்பாண்டில் 30.9.98 வரையில் கட்டுப்பாட்டுப் பொருள்கள் ரூ.67,766.91 இலட்சத்திற்கும், கட்டுப்பாடற்ற பொருள்கள் ரூ.23,142.82 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப் பட்டுள்ளன.

> கூட்டுறவு என்பது பொருளாதார மற்றும் சமுதாயச் சிந்தனைக்கு ஏற்ற ஒன்றாகும். சமத்துவ நிலையை அடையப் பயன்படுத்தும் முதல்படியே கூட்டுறவாகும்.
> – பண்டித நேரு

கோயம்புத்தூர் சிந்தாமணி, திருச்சி சிந்தாமணி மற்றும் அமராவதி, மதுரை பாண்டியன், சென்னை–பூங்காநகர் மற்றும் கும்பகோணம் சந்திரசேகரபுரம் ஆகிய 6 நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை இலாபகரமாக நடத்திடும் வகையில் புனரமைப்புத் திட்டம் ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.11.24 கோடியில் 5 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் இதனைச் செயல்படுத்திட, இவ்வாண்டிற்கென ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இதைப்போன்று, இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ.9.83 கோடி திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்த அரசால் முடிவெடுக்கப் பட்டுள்ளது..

நடப்பாண்டில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 25 புதிய கிளைகளைத் திறக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 30.9.98 வரை சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் கொளத்தூர், ஆர்.வி. நகர் ஆகிய இடங்களிலும், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் பூம்புகார் மேலையூரிலும், தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் பாகனூர் மற்றும் சூளகிரியிலும் புதிய கிளைகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 50 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கும், 50 நகரக்கூட்டுறவு வங்கிகளுக்கும் கட்டடம் கட்டித் தரப்பட உள்ளன.

***கூட்டுறவு ரதம்:***

கூட்டுறவுத் தத்துவங்கள், கொள்கைகள், திட்டத்தின் செயல்பாடுகள், 'வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துதல்', 'கூட்டுறவு வங்கிகளில் சேமியுங்கள்' போன்ற கூட்டுறவுக் கோட்பாடுகளை வலியுறுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு ரதம், 45வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவின் துவக்க நாளன்று கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ரதம் தமிழகம் முழுவதும் சென்று, கூட்டுறவு இயக்கத்தின் பணிகளை விளக்கிடும். ●

# உலக சிக்கன நாள்

## 30 அக்டோபர் 1998

'இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு' என்பதை நினைவூட்டி, சேமிப்பைப் பெருகச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் உலக சேமிப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

*'ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை'*

என்று வள்ளுவப் பெருந்தகை, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது வாழ்க்கை செழிப்புடன் அமைவதற்கு வழி என எடுத்துக் கூறியுள்ளார். செலவைச் சுருக்கிச் சேமிப்பைப் பெருக்குவது வாழ்க்கையில் ஒரு நெறியாக வளரவேண்டும்.

ஏழை, எளியோர், நடுத்தர மக்கள், உயர் வருவாயினர், சிறு மற்றும் பெரும் வணிகர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள், வேளாண் பெருமக்கள் போன்ற பலதரப்பட்ட மக்கள் சேமிப்பின் மூலமே தங்களின் வாழ்க்கையை இனிதாகவும், செழுமையாகவும் அமைத்துக்கொள்ள இயலும். சேமிப்பின் அவசியத்தை அனைவரும் உணர்ந்து, நடைமுறையில் சேமிக்கும் பழக்கத்தினை உறுதியாய்க் கடைபிடித்திட வேண்டும்.

இதனை வலியுறுத்தும் வண்ணம், மத்திய மாநில அரசுகளின் சிறுசேமிப்புத் துறைகள் அனைத்துத் தரப்பு மக்களிடையே சேமிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி நம்பிக்கை மற்றும் முழுப் பாதுகாப்புடன் உயர் வருவாய் அளிக்கக்கூடிய பல்வேறு பிரிவினருக்கும் ஏற்ற செம்மையான பல நல்ல சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இதன் மூலம் பெறப்படும் தொகை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணித் திட்டங்களைச் செயல்படுத்திட உதவுவதுடன், மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், மக்களின் நலம் பேணும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிடவும் பெருந்துணை புரிகிறது.

'வாழ்வில் சேமிப்பு - வாழ்வுக்குப் பாதுகாப்பு' என்ற உண்மையை உணர்ந்து செலவில் சிக்கனத்தைக் கடைபிடித்து, சேமிப்பைப் பெருக்கி, வாழ்க்கையில் சிறப்புடன் உயர்ந்து, நாட்டையும் உயர்த்திட அனைவரும் உறுதி பூண்டிட வேண்டும் என இந்நாளில் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.



- **மு.கருணாநிதி**
தமிழ்நாடு முதலமைச்சர்

# கூட்டுறவு நாட்டுயர்வு!

**– டி.எஸ்.ஸ்ரீதர், இ.ஆ.ப.,**
**பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழகத்தில் சுமார் **27,000** கூட்டுறவுச் சங்கங்கள், **14** செயல் பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் பல்வேறு கூட்டுறவுப் பணிகளைச் செய்துவருகின்றன.

தமிழகத்திலேதான், இன்றியமையாத பொருட்கள் முழுக்க முழுக்கக் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

***விற்பனைச் சங்கங்கள்***

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், விவசாயம் சாராத சிறுதொழில்கள், சிறு வியாபாரம் மற்றும் பண்ணை சாராக் கடன்களை வழங்கி, ஏழை–எளியவர்களின் வாழ்வில் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றன. அது மட்டுமல்லாமல், கூட்டுறவு நிலவள வங்கிகள் நீண்ட காலம் பயன் தரக்கூடிய அளவுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கி விவசாயப் பெருங்குடி மக்களை வாழ்விக்கின்றன.

விவசாயத்தில் ஈடுபட்ட உழவர்களுக்கு அவர்களது உற்பத்திப் பொருள்களை ஆதாய விலைக்கு விற்றுத்தர, வேளாண்மை விளைபொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த விற்பனைச் சங்கங்களின் தலைமை நிறுவனமாகத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்படுகிறது.

***நுகர்பொருள் வழங்குதல் – கூட்டுறவுப் பண்டகசாலைகள்***

பொதுமக்களுக்குத் தேவையான நுகர் பொருள்களைச் சரியான எடையளவில் நியாயமாகவும், தரமாகவும் வழங்கும் பணியில் கூட்டுறவுப் பண்டக சாலைகள் செயல்படுகின்றன. ஒரே இடத்தில் அனைத்துப் பொருள்களையும் வழங்குகின்ற வகையில் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளும், நவீன சுயசேவைப் பிரிவுகளும் செயல்படுகின்றன.

***மலைவாழ் மக்கள் நலன்***

மலைப்பகுதியில் வாழும் பழங்குடியினர் வாழ்வு மேம்படவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப்) கடும் பணியாற்றுகின்றன. இந்த வகையில், தமிழகத்தில் மலைவாழ் பழங்குடியிருக்கு உதவிட 18 லேம்ப் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

***கைத்தறித் தொழில்***

கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்து, அவர்களுக்குத் தறி செய்யும் நெசவுக்கருவிகள், நூல் மற்றும் இடு பொருள்கள் வழங்கி, நெசவாளர்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றன. மேலும் நெசவாளர்களுக்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், சிக்கன நிதித் திட்டம், வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்படுவதால் நெசவாளர்களின் வாழ்விற்கு இந்தச் சங்கங்கள் பெருமளவில் உதவுகின்றன.

***பால்வளம்***

வெண்மைப் புரட்சியில் தரமான பால் உற்பத்தி, உற்பத்தியாளருக்கு நியாயவிலையில், மான்ய விலையில் கால்நடைத் தீவனம், நுகர்வோருக்கு நியாயவிலையில் பால், பால்பொருள்கள் அனைத்தையும் வழங்குவது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களே.





### சர்க்கரை ஆலை

உழவுத் தொழிலில் முக்கிய இடம் பெற்றுள்ளது கரும்பு உற்பத்தியாகும். கரும்பிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யவும், சர்க்கரையையும், உப பொருள்களையும், உற்பத்தியாளர்களின் சிறந்த ஆதாயத்திற்கு விற்பனை செய்திடவும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உதவிபுரிகின்றன.

### வீட்டு வசதி

ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்டவும், வீட்டைச் சீரமைக்கவும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் கிராம அளவிலும், நகர அளவிலும் கடும் பணியாற்றி வருகின்றன.

### மீன்வளம்

மீனவ சமுதாயத்திற்காகவும், அவர்கள் முன்னேற்றத்திற்காகவும் உதவிட மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மீனவர்களுக்குக் கடன் மற்றும் மீன்பிடி தொழில்களுக்கு வேண்டிய கருவிகளுக்கான ஆலைகள், மோட்டார்ப் படகுகள் போன்றவற்றை வழங்குதல், மீன்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்தல், மீனவர்களுக்கு விபத்துக் காப்புறுதி மற்றும் வீட்டுவசதி செய்துதரும் பணிகளில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன. மீன் விற்பனை செய்தல், வலைகள் பின்னுதல், மீன்களை உலர்த்துதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவிட மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல் படுகின்றன.

> **முதல் கூட்டுறவுச் சங்கம்**
>
> *இப்போது உலகெங்கும் காலூன்றியுள்ள கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தவர் சர் ராபர்ட் ஐவன் என்பவராவார். 1950-ல், இவரால் இங்கிலாந்தில் முதன்முதல் தோற்றுவிக்கப்பட்ட சங்கம் – 'ராக்டேல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' என்பதாகும்!*
>
> – ஆர்.எஸ்.கீதா

### மகளிர் நலம்

மகளிர் மேம்பாட்டிற்காகச் சமூகநலத்துறையின் கீழ் பல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. வறுமைக் கோட்டிற்ககுக் கீழ் வாழும் மகளிர், ஆதரவற்ற மகளிர், கணவரால் கைவிடப்பட்டோர், ஊனமுற்ற மகளிர், மற்றும் ஆதிதிராவிடர் மகளிர் ஆகியவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திடும் வகையில், சீருடை, காலணிகள், ஊட்டச்சத்துணவு, எழுது பொருள்கள் மற்றும் கயிறு தயாரித்தல் போன்ற பொருட்களை விற்பனை செய்து, உறுப்பினர்களின் வாழ்வில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்திடும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்.

### வேளாண் பொறியியல் பணிகள்

மாவட்ட விவசாயப் பொறியியல் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உழவுக் கருவிகள் குறைந்த விலையில் விற்பனை செய்தல், குறைந்த வாடகைக்குத் தருதல், இடுபொருட்கள் வழங்குதல், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து விவசாயிகளக்கு உதவுகின்றன.

### கால்நடை வளர்ப்பு

ஆடு, கோழி, மாடு, வாத்து போன்ற பண்ணைகள் அமைத்து விவசாயிகளின் வாழ்விற்கு உறுதுணையாகத் திகழ்ந்திடும் கால்நடை கூட்டுறவுச் சங்கங்கள்.

### எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி

விவசாயிகள் உற்பத்தி செய்யும் எண்ணெய் வித்துக்களைக் கொள்முதல் செய்து அவர்களுக்கு ஆதாய விலைக்கு விற்று அவர்களின் வாழ்வில் மேம்பாடு அடைய உதவியாகத் திகழ்ந்திடும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்.

எனவே – விவசாயப் பெருங்குடி மக்களே கூட்டுறவுச் சங்கத்தை நாடுவீர். பயன் பல பெற்று வாழ்க்கையில் உயர்ந்திடுவீர். கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை மறவாதீர்! □



# பண்டித நேருவும் - வெளியுறவுக் கொள்கைகளும்

உலகத்திலுள்ள அனைத்து வெளியுறவு அமைச்சர்களெல்லாம், கொஞ்ச காலத்திற்கு அமைதியாக இருந்துவிட்டால், அது உலகிற்கு நன்மை பயப்பதாக இருக்குமென்று நான் சில சமயம் நினைப்பதுண்டு.

ஏனெனில், வெளியுறவு அமைச்சர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அவரவர்களது நாட்டின் சட்டமன்றங்களிலோ, அல்லது ஐக்கிய நாடு சபைக் கூட்டங்களிலோ பேசுகின்ற பேச்சுக்களே, வெளியுறவுக் கொள்கைகளுக்குப் பெரிதும் கேடு பயக்கின்றன என்றே நான் கருதுகிறேன். அவர்களது, வெளிப்படையான ராஜரீகப் பேச்சுக்களே இதற்குக் காரணம் என்றே நானும் உங்களில் பலரும் நம்பக்கூடுமென்றே நான் கருதுகிறேன். வெளிப் படையான ராஜரீகப் பேச்சுக்கள் என்பது ஓரளவிற்கு நல்லதுதான், எனினும், அவையே வெளிப்படையான பிணக்குகளையும் ஒருவருக்கொருவர் தடித்த வார்த்தைப் பிரயோகச் சாடுதல்களையும் கொண்டவை யாகவும் ஆகிவிடுவதால், அது உலக அமைதியை உருவாக்கிட உதவிடாது என்றே நான் நம்புகிறேன். இவையே ஒரு வெளிப்படையான, ஒருவருக்கொருவர் இடையே தடித்த வார்த்தைகளாலான போட்டியாகவே மாறிவிடுகின்றன. ஒரு நாட்டினுடைய வெளிநாட்டுக் கொள்கையைப் பிறிதொருவர் சாடாமல், தனது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி மட்டும் பேசுவதே உங்களனைவரது பாராட்டைப் பெறுவதாக இருக்குமென்றே நான் கருதுகிறேன். பேசுகிறவர் பொதுவானவற்றைக் குறிப்பிடலாம்; தேவைக்கேற்ப, குறிப்பிட்ட விஷயங்களைக் கோடிட்டு அல்லது ஒப்பு நோக்கிப் பேசலாம்.

முன்னரெல்லாம், வெளிநாட்டுக் கொள்கை யென்றாலே, மிக அருகிலுள்ள நாட்டினோடு உள்ள நட்பு என்ற அடிப்படையிலேயே கருதப்பட்டு வந்தது. ஆனால், மிக அருகில் உள்ள சில அண்டை நாடுகள் எனப்படுகின்ற நிலைமாறி உலகத்திலுள்ள அனைத்து நாடுகளுமே அருகிலுள்ள நாடுகள் என்ற விரிவான நிலையில், வணிகம், பொருளாதாரத் தொடர்பு போன்ற இன்ன பிரச்சினைகள் பற்றியெல்லாம் தற்பொழுது சிந்தித்து விவாதித்திட வேண்டியதுள்ளது.

உலகில், எங்காவதொரு பகுதியில் ஏற்படுகிற, பெரிய பிரச்சினையானது, அது அகில உலக அளவில் விரவி அதாவது பிரிக்க இயலாச் சண்டையாக, அமைதிக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக மாறிவிடுகிறது. எனவே, வெளிநாட்டுக் கொள்கை என்பது அது அடுத்திருக்கிற நாட்டோடு மட்டும் என்றில்லாமல், அண்டை நாடுகள் ஒன்றுக் கொன்று விசேஷ அக்கறை கொண்டவைகளாகவே உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. எனவே, இந்தியாவானது, நிலம் மற்றும் கடல்சார் அண்டை நாடுகளுடனான தனது உறவுகளைப் பற்றிச் சிந்திப்பது என்பது தவிர்க்கவியலாததாகி உள்ளது. அவை எந்தெந்த நாடுகள்? என்று பார்த்தால் இடப்பக்கம் பாகிஸ்தான், இந்தியாவைத் தொட்டு இல்லையாயினும் ஆப்கானிஸ்தான், திபெத், சீனா, நேபாளம், பர்மா, மலேயா, இந்தோனேஷியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளாகும். இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் தனியாகப் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வழிவகையைப் பற்றிச் சிந்தித்தால் அது ஒரு தனித்துவமானதே. இருநாட்டு மக்களின் உணர்வுபூர்வமான ஒன்று இது என்பதால்,

நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே
நேரு வானார்... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர்
கடந்தபோது - என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி
நேருவானார்.

– கலைஞர்

இப்பிரச்சினையின் ஆழம் என்ன என்பது நீங்களனைவரும் அறிந்ததே. இப்பிரச்சினை மனோதத்துவ ரீதியானது என்பதால், இது மேலோட்டமாக அணுகிட இயலா மிகக் கடினமானதாகும். இவ்வோராண்டு அல்லது ஒன்றரையாண்டுக்கால இடைவெளியில் எங்களுக்கிடையேயான நல்லுறவு வளர்ந்துள்ளது; வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் மிக நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டேயாக வேண்டும் என்பது ஐயத்திற்கு இடமற்ற தவிர்க்கவியலா ஒன்றென்றே நான் நம்புகிறேன். பழைய கசப்பான சம்பவங்களுக் கிடையே, இந்நல்லுறவு எப்பொழுது நிகழும் என்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும், வேறுபாடுகளுடன் கூடிய அண்டை நாட்டவர்களாக நாம் இனியும் இருந்திடலாகாது. நம்முடைய நலன்கள் ஒன்றுக்கொன்று பின்னப்பட்டுள்ள நிலையில், இதுவரை நிலவிய பகைமையுணர்வுகளுக்கிடையில், நாம் நல்லுறவினை, நட்புறவான உணர்வினை வளர்த்துக் கொண்டேயாக வேண்டும். கொடுமையான காலகட்டங்களில் ஒன்றாகவே இருந்த நாம், ஆச்சரியப்படத்தக்க வகையிலே அதிர்ச்சிக்கிடையே இப்பிரிவினை எப்படி நிகழ்ந்தது என்பதெல்லாம் நாம் அறிந்ததுதான். நம்முடைய தொடர்புகள் அனைத்தும் அதிர்ச்சி தரத்தக்க அளவிற்கு தகர்க்கப்பட்டு விட்டன. தொலைத் தொடர்புகள், தொலைபேசி இணைப்புகள், அஞ்சல் சேவைகள், இரயில்வே சேவைகள் ஆகிய அனைத்துமே துண்டிக்கப்பட்டு விட்டன. நம்முடைய இணைப்புச் சேவைகள் அனைத்துமே முறிந்துவிட்டன. நம்முடைய இராணுவமும் பிரிக்கப்பட்டது. நம்முடைய நீர்ப்பாசனத் திட்டங்கள் தடைபட்டுப் பல வேண்டாவிளைவுகளை அவை ஏற்படுத்திவிட்டன. இப்படிப் பட்டியலிட்டுக்கொண்டே போனால் அது கணக்கிலடங்கக் கூடியதல்ல.

ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக, உடைந்து நொறுங்கிப் போன மிக முக்கியமான ஒன்று எதுவென்றால் அது இந்தியத்தாயின் உருவமன்றோ? இது இலசட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில், ஆன்மாக்களில் பேரிடியாய் மிகப்பெரிய பின் விளைவுகளை உண்டாக்கி விட்டது. இந்தியாவின் ஆன்மாவிற்கு ஏற்பட்ட இத்தகைய மனக் காயங்களைவிடக் கொடுமையாக, நாடுமாறி அகதிகளாக நம்மக்கள் குடிபெயர்ந்து போன அந்தத் துயரக் காட்சியினை கனத்த நெஞ்சங்களோடு நம்மால் காணமுடிந்தது. இத்தகு துயரச் சம்பவங்களைக் கடந்தும், அனைத்து வகையான காயங்களைப் பொறுத்துக் கொண்டும் - தற்பொழுது, மீண்டும் பாகிஸ்தானுடன் நல்லுறவு பூணவே நாங்கள் முயற்சிக்கிறோம். இன்னும் தீர்க்கப்படாப் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன; படிப்படியாக அவைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றேநான் நம்புகிறேன்.

பிற நாடுகளுடனான உறவைப் பொறுத்தவரையில், நாங்கள் நட்புறவினடிப்படையிலேதான் அவற்றைப் பேணி வருகிறோம். உதாரணமாக, ஆப்கானிஸ்தான், திபெத், நேபாளம் போன்ற அனைத்து அண்டை நாடுகளுடனும் மிகுந்த நட்புறவினிடையே நாங்கள் உறவு பூண்டு வருகிறோம். உண்மையிலேயே, எந்தவொரு நாட்டினுடனும் நாங்கள் பகையாகவோ, எதிராகவோ இல்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விழைகிறேன். இயற்கையாகவே, வணிகம் மற்றும் பொருளாதாரத் தொடர்பில் சில நாடுகளுடன் மிக நெருக்கமாகவும், சில நாடுகளுடன் குறைந்த நெருக்கத்துடன் இருக்குமேயன்றி, எல்லா நாடுகளுடனும் நாங்கள் நட்புறவோடுதான் இருக்கிறோம் என்பதை என்னால் உறுதிபடச் சொல்ல முடியும். இது ஒரு நல்ல வெற்றியென்றே நான் கருதுகிறேன்.

பூகோள அடிப்படையிலும், பல்வேறு வரலாற்றுச் சிறப்புகளாலும், ஆசியாக் கண்டத்தில் இந்தியா ஒரு தனித்துவ முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. ஆசியாக் கண்டத்தில் ஒரு நாட்டிலோ அல்லது பல நாடுகளிலோ ஒரு பிரச்சினையெனில், அது பாதுகாப்புப் பிரச்சினையானாலும், தொழில் அல்லது வணிகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும், இந்தியாவைப் புறக்கணித்துவிட்டுத் தீர்வுகாண்ப தென்பது இயலாத ஒன்றென்றே கருதலாம்.

ஆங்கிலேய ஆதிக்கத்தில் இருந்து வந்த காரணத்தினால், அந்நாட்களில் இந்தியாவால் அண்டை நாடுகளான ஆசியாக் கண்டத்தோடு கூட நேரடியாகத் தொடர்பு கொள்ள இயலா நிலை. அந்நாட்களில் எங்களால் உலகத்தை ஆங்கிலச் சாளரத்தின் வாயிலாகத்தான் காணமுடிந்தது.

ஏறத்தாழ, 150, 200 ஆண்டுகளாக ஆசியாக் கண்டமானது ஐரோப்பியக் கண்டத்து அல்லது ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து வந்தது. அவர்கள் இங்கு வந்து ஆசியாக் கண்டத்தின் வளமனைத்தையும் சுரண்டிச் சென்று விட்டனர். தற்பொழுது ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகள் விடுதலையடைந்து, புதிய வளர்ச்சியை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், ஆசிய நாடுகளில் சில, எங்கே மீண்டும் அந்நிய ஆதிக்கத்தின் மூலம் பெற்ற சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடுமோ? என்ற அச்சத்திலேயே உள்ளன. இதனிடையே, அடிப்படை வசதிகள், உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய நிலையில் ஆசிய நாடுகள் இருந்து வருகின்றன. ஆனால், ஆதிக்க ஐரோப்பிய நாடுகளும் கூட, கடந்த இரண்டாம் உலகப் போரின் காரணமாகப் பல பிரச்சினைகளில் சிக்கியுள்ளன. ஆசியாக் கண்டத்திற்கு இழைத்த ஊழ்வினை அவர்களை வாட்டுகின்றதென்றே கூடக் கூறலாம்.

## ஐக்கிய நாடுகள் நிறுவனம்

ஐக்கிய நாடுகள் அமைப்பை எடுத்துக் கொண்டால், அதில் உலக நாடுகளில் பெரும்பான்மையானவை அங்கம் வகிக்கின்றன. ஆனால், அதில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்திலேயே அது உள்ளது என்பது உண்மையே; அதனாலேயே இங்கு விவாதிக்கப் படுகின்ற பிரச்சினைகளில் பெரும் பாலானவை, அவ்வல்லரசு நாடுகளின் சார்புடை யவைகளாகவே இருந்து வருகின்றன.

அந்நாடுகளின் பிரச்சினைகளை நாங்கள் ஈடுபாட்டோடு நோக்கினாலும், இந்தோனேஷியா நாட்டின் பிரச்சினையைத்தான் நாங்கள் பெரிதாக நினைக்கிறோம். ஏனென்றால், அங்குள்ள காலனி ஆதிக்கம் தொடருமானால், அது அவ்வாறு அனுமதிக்கப்படுமானால், அது இந்தியாவிற்கும், ஆசிய நாடுகளுக்கும், ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவே எங்களால் கருதமுடியும்.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகள், இந்தோனேஷியாவில் நடப்பது குறித்து வேதனை யடைந்துள்ளன. இந்தோனேஷியா நாடு நெதர்லாந்தின் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்றே விரும்புகின்றன. ஆனால், அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் இந்நாடு களுடன் நெதர்லாந்தும் இணைந்திருப்ப தாலும், அந்நாட்டைத் தங்கள் அரசியல் குழுவில் இணைத்துக்கொள்ள விழைவதாலும், இந்தோ னேஷிய நாட்டு விவகாரத்தில், வெளிப்படையாக இவைகளால் ஆதரிக்க இயலவில்லை என்பது உண்மையே.

பழமை வாய்ந்த எங்கள் இந்திய நாடு, விடுதலை பெற்றுச் சில காலமே ஆகியுள்ள நிலையில், இளம் நாடாக, வெளிநாட்டுக் கொள்கைகளில் நாங்கள் முன்னேறி வருகிறோம். வெளிநாட்டுக் கொள்கை யென்பதில், இந்தியாவைப் பொறுத்தவரையில், முடிந்த அளவுக்குப் பிறநாடுகளுடன் நேசத்தை வளர்த்துக் கொள்ளவே விழைகிறோம்.

ஆனால், வெளிநாட்டு உறவில், பிரச்சினைகளின் அடிப்படையில், சில நாடுகளோடு மிக நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ளும்பொழுது, இயல்பாகவே வேறு சில நாடுகளுடன் பகைமை ஆகிவிடுகிறது. அதிர்ஷ்டவசமாக, இந்தியாவானது எந்நாட்டுடனும் பழைய பகைமை என்பதை உருவாக்கிக் கொள்ளவேயில்லையென்றே நம்பலாம். ஆனால், நாங்கள் ஆபத்துக்குப் பயந்து வேலியிட்டுக் கொள்கிறோம் என்று சிலர் கருதக்கூடும். அது அவ்வாறல்ல; பிறநாடுகளுடன் முடிந்த அளவிற்குப் பகைமையைத் தவிர்த்திடும் உறுதியான ஒரு எத்தனிப்பேயன்றி வேறல்ல.

எந்தவொரு நாடும் முதலில் தற்காப்பை உறுதிசெய்து கொண்டாக வேண்டும். தற்காப்பு என்றாலே, துரதிருஷ்டவசமாக, ஆயுதப்படையை உருவாக்கி, வேண்டுமெனில் இராணுவத் தளவாடங் களையும் உருவாக்க வேண்டியது அவசியமாகி விடுகிறது. அப்படிச் சுயபாதுகாப்பை உறுதிப் படுத்தும்பொழுது, பிறநாடுகளின் பகையைச் சம்பாதிக்காதவாறு, பிறருடைய சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்காதவாறு, எச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுள்ளது. அடுத்த நாட்டினுடைய உறவைக் கெடுத்துக் கொள்ளாதவாறு பேச்சையும், அறிக்கை வெளியிடுதல் போன்றவற்றிலும் மிகுந்த எச்சரிக்கையைக்



கடைப்பிடித்தாக வேண்டும். ஒரு நாட்டின் நடவடிக்கையை விமர்சிப்பது அல்லது கண்டிப்பது போன்ற நிலைகளில், கண்டனத்திற்குரிய நாடாக அது திகழ்ந்தாலும் அதுகுறித்து உயர்மன்றங்களில் உரக்கக் கூச்சலிட்டுப் பேசுவது என்பது பிரச்சினையை மோசமாக்கிவிடும். இரண்டு புறமும் ஏற்படும் இத்தகைய கூச்சல்கள் போர் மூளக்கூடிய அபாயங்களைக்கூட ஏற்படுத்திட இவையே காரணங்களாகி விடும். நான் அடிக்கடி சுட்டிக்காட்டுவதைப்போல், உலகத்தின் பெரும் பான்மையினர் போரை விரும்பவில்லை.

> **து**ணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
> துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்
> இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும்-
> இதனால் **'நேரு மாமா'** வானார்.
>
> **- கலைஞர்**

இந்தியாவைப் பொறுத்தவரையில், எந்தவித அதிகாரத் தொகுப்புகளுடனும் இணைத்துக் கொள்வதை நாங்கள் விரும்பவில்லை. அதற்காக ஏதாவதொரு நாட்டினுடனும் நாங்கள் நெருக்கமாக இருக்கவில்லை என்று அர்த்தமாகி விடாது. அத்தகைய நெருக்கம் என்பது, பல்வேறு நிலைப்பாடுகளில் அதாவது முதன்மையாக, பொருளாதாரம், அரசியல், விவசாயம் போன்ற பல்வேறு கூறுகளில் அது அமைந்துள்ளது. அதிகாரத் தொகுப்புகளுடன் நெருக்கம் காட்டாத நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருப்பதாலேயே, உலக அமைதி குறித்த நிலைகளில், நாங்கள் எங்களுடைய முழுபலத்தையும் பிரயோகிக்கத்தக்க, நல்லதொரு நிலையிலேயே உள்ளோம். இதனால், நாங்கள் தனிமைப்படுத்திக் கொண்டுவிட்டோம் என்று அர்த்தமாகாது. உலகம் ஒருங்கிணைந்து விரைவாகச் சுருங்கி 'ஏக உலகமாக' அது பரிணமித்திடட வேண்டும் என்ற அடிப்படையில், உலக நாடுகளுடன் நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளவே நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்.

ஆனால் நடப்பதென்ன? போரைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிற ஒருவித நாசப்போக்கினைத்தான் நம்மால் காணமுடிகிறது. போர் என்பது கொடுமையானது என்பதை விட அதனுடைய பின்விளைவுகள் அதைவிடக் கொடுமையானவையாகும். உலகில், எந்தவொரு இடத்தில் போர் நடந்தாலும் அது பிற நாடுகளிலும் எவ்வளவு பாதிப்பை உண்டாக்கும்? போரைத் தொடர்ந்து அதன் பின்விளைவாக எத்தனை இலட்சம் மக்கள் பட்டினியில் வாடுவர்? என்பது நாம் அறியாத ஒன்றல்ல. எனவேதான், முடிந்த அளவிற்கு, ஒவ்வொரு தனிமனிதனும் போரைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் 'உலக அமைதியைத்தான்' நாங்கள் பெரிதும் வலியுறுத்துகிறோம். எனவேதான், ஐரோப்பாவில் பெர்லின் பிரச்சினையாக இருந்தாலும், ஆசியாவில் இந்தோனேஷியப் பிரச்சினையாக இருந்தாலும், தென் ஆப்பிரிக்கப் பிரச்சினையாக இருந்தாலும் அவைகளுக்குச் சுமுகமான தீர்வு வேண்டும் என்கிறோம். எனவே, மிக முக்கியமாக, காலனி ஆதிக்கத்திற்கு ஆட்பட்டிருக்கின்ற, இந்தோனேஷியாவிற்கும், தென் ஆப்பிரிக்காவிற்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதையும், அப்பொழுதுதான் ஒருநாட்டைப் பற்றி அடுத்த நாடு சந்தேகக் கண்கொண்டு பாராமல் நல்லுறவுடன் திகழ முடியும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

இப்பிரச்சினைகளை முன்னிறுத்தி, ஐக்கிய நாடுகள் சபையானது நல்ல தீர்வினைக் காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஒரு நாட்டினுடைய கொள்கையில் அடுத்த நாடு தலையிடக் கூடாது என்றே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஒரு நாட்டின் மீது, பிறநாடானது தனது கொள்கையைத் திணிக்க எத்தனித்தால், அதை எதிர்க்க வேண்டிய நிலையில், பல பிரச்சினைகள் உருவாகக் கூடும். அவை தொடர் பிரச்சினைகளாகவே மாறிவிடக்கூடும்.

**'உலகம் ஒன்றே' என்பதை உறுதிப்படுத்த, நாங்கள் கடுமையாக முயற்சிக்கிறோம். பலவிதமான பிரிவுகளில் இருந்துவருகின்ற உலகத்தாரை ஏன் நாம் ஓரணியில் ஒன்று சேர்த்திட முயற்சித்தல் கூடாது? எங்களைப் பொறுத்தவரையில் "நாமும் வாழவேண்டும் பிறரையும் வாழ விடவேண்டும்" என்ற தத்துவத்தில் நாங்கள் உறுதியாக நிற்கிறோம்.**

உலகத்தை ஒன்றுபடுத்தத் தேவையான வலிமையான சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன; நெருக்கமான உறவுகளும் அதிகரித்துத் தான் வருகின்றன. நம்மில் பலர் உயிரோடு இல்லாமல் கூட இருக்கலாம், ஆனால் என்றாவது ஒருநாள் உலகம் ஓரணியாய் ஒன்றுபடத்தான் போகிறது. இதனடிப் படையில் நாம் சிந்தித்தால் நாடுகளுக்கிடையில் நல்லுறவு வளரத்தான் செய்யும்.

**- இரா.பரதன்,** எம்.ஏ.,
(*Source* : **NEHRU, the first sixty years**)

மலைமேய்ச்சலுக்குப் போகும்
கிழக்குச் சீமை
மாடுகளின்
கழுத்து மணியோசைகள்
மறந்த சாலைகள்
மிரள மிரள அதிரும்
நகரப் பேருந்தில்
முஸ்தபா முஸ்தபா!



கொக்குகள் சுமந்து எருமைகள்
மேய்ந்த
குளத்தில் முளைத்த
கட்டிடத்தில்
கேட்கும்
'ரெயின் ரெயின்
கோ எவே!'

கும்மி தெம்மாங்கு நடவுப்பாட்டு
தாலாட்டு ஒப்பாரிகளுடன்
மொத்தமாய்
செத்த
பாட்டிக்கு ஆறுதலாய்
விடிய விடிய விடிய
ஓடுவான் சின்னத்திரையில்
ஜென்டில்மேன் - இந்தியன்!



தமிழ்க் குடிமகன்ங்கிற
பெயரிலேயே
இந்தியக் குடிமகன்
இல்லைங்கறது மாதிரி
இருக்கே
என்கிற கேள்விக்கு
மிரளுவான்
என் சின்னமகன்
தமிழ்த்தம்பி

# கி.மு. 2000
# தமிழ்
# கி.பி.0000

- அறிவுமதி

வாழிய செந்தமிழ் என்றதற்காகப்
பாரதி,
தமிழுக்கும் அமுதென்று பேர்
என்றதற்காகப்
பாரதிதாசன்
இவர்களுக்கும்
தரப்படுமோ
துரோகிகள் என்கிற
தேசியப்
பட்டம்!

மண் தொட்டிக்குள்
குரோட்டன்சுகளாய் -
கண்ணாடித்
தொட்டிக்குள்
மீன்களாய் -
பார்த்து
ஆறுதல் அடைய நம்
பேரப்பிள்ளைகளுக்கு
மிச்சமிருக்குமோ....
இரண்டாயிரத்தில்
தமிழ்!

*கேள்வி* : தமிழ்க்குடிமகன்ங்கிற உங்க பெயரிலேயே நீங்க இந்தியக் குடிமகன் இல்லைங்கிறது மாதிரியிருக்கு.

*பதில்* : அது தவறு. நாங்கதான் ஏற்கெனவே சொல்லிட்டோமே. மொழியால் தமிழன். இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன்.

# கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழக அரசின் - "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கொள்கையினைக் கூட்டுறவுத்துறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் தலைமை நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமாகும்.

***தமிழகம் முழுவதிலும் இணையத்தின் பணிகள்***

தமிழகம் முழுவதிலும் உள்ள முதன்மைச் சங்கங்களின் வழியாக இவ்விணையம் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், மாநகராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடி, புதிய வீடு வாங்க உயர்ந்தபட்சம் ரூ.5 இலட்சம் வரை கடன் வழங்கி வருகிறது. மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் புதிய வீடு கட்டுவதற்கு ரூ.3 இலட்சமும், மற்ற இடங்களில் ரூ.2 இலட்சமும் கடன் வழங்கி வருகிறது. உறுப்பினரின் வயதைப் பொறுத்து - 7 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரை கடன் வழங்கப்படுகிறது.

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீட்டின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.14,000 ஆகும். இதில் கடனாக ரூ.10,000-மும், மானியமாக ரூ.2,000-மும் வழங்கப்படுகிறது. பயனடைந்தோரின் முதலீடு ரூ.2,000 ஆகும். கிராமப்புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகட்ட உயர்ந்தபட்சம் ரூ.70,000-மும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.1,20,000-மும் கடனாக வழங்கப்படுகிறது.

நகர்ப்புற மக்களின் வீட்டு-வசதிக்கென 511 நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களும், கிராமிய வீட்டு வசதித் திட்டத்தினைச் செயல்படுத்திட 186 வட்ட வீட்டு வசதிச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த மூலை முடுக்கில் இருக்கும் தனி நபரும் ஏதேனும் ஒரு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கடன் பெற்று வீடு கட்ட இயலும்.

***முதன்மைச் சங்கங்களுக்கு வழங்கிய கடன்கள்***

கிராமிய மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 31-8-98 முடிய 9,14,290 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ.1,935 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் கிராமிய வீட்டுவசதித்திட்டம் மூலம் 6,88,737 வீடுகளுக்கு ரூ.571.41 கோடியும், நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் மூலம் 2,25,553 வீடுகளுக்கு ரூ.1,363.49 கோடியும் கூடுதல் கடனாக வழங்கப்பட்டன. நாட்டிலேயே கூட்டுறவுத்துறை மூலம் ரூ.1,935 கோடிக்கு மேல் கடன் வழங்கியது இவ்விணையம் மட்டுமே.

***தமிழக அரசின் உதவி***

இவ்விணையம் துவங்கியபோது ரூ.5 இலட்சத்தைத் தமிழக அரசு பங்கு மூலதனமாக வழங்கியது. தற்பொழுது அரசின் பங்கு மூலதனம் ரூ.4.85 கோடி வரை உயர்ந்துள்ளது.

***இவ்விணையம் 1998-99ஆம் ஆண்டில் வழங்க உள்ள கடன்***

நடப்பு ஆண்டில் நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், ரூ.458 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எப்.எக்ஸ். ஃபெர்னாண்டோ**
மேலாண் இயக்குநர்



| வ.எண். | திட்டம் | குறியீடு | நிதியுதவி (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் | 15,000 | 260.00 |
| 2. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் | 12,000 | 33.60 |
| 3. | கிராமிய வீட்டுவசதித் திட்டம் | | |
| | அ. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் | 45,000 | 63.23 |
| | ஆ) குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 6,500 | 45.50 |
| | இ) நடுத்தர வருவாய்ப் பிரிவினர் | 3,000 | 36.00 |
| 4. | சமத்துவபுரம் குடியிருப்புகள் அமைக்கக் கடன் உதவி | 10,000 | 20.00 |
| | கூடுதல் | 91,500 | 458.33 |

இவ்விணையம் கடந்த 39 ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளது. தமிழக மக்களின் வீட்டுவசதித் தேவையைத் திட்டமிட்ட முறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. முதன்மைச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதிலும், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதிலும், பங்குத் தொகை வசூலிப்பதிலும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் அகில இந்திய அளவில் இந்த இணையம் முதலிடம் வகிக்கிறது.



# காத்திருந்த வேளையில்

வாஸந்தி

மொட்டை மாடியிலிருந்து உலகத்தைக் கீழ்நோக்கிப் பார்க்கும்போது காலை நேரம் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. தப்பாமல் சூரியன் உதித்து தெருவிலும் கட்டிடங்களிலும் ஒளிபரப்பியிருந்தது - சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவை போல பறவையினமும் மனித இனமும் இயங்க ஆரம்பித்திருந்தது. எதிலுமே பிசிறில்லாமல் தெரிந்த தொடர்ச்சி சக்திவேலுக்கு பிரமிப்பை ஏற்படுத்திற்று. இது ஒரு நிரந்தர இயக்கம் என்று அவனுக்குத் தெரியும். தினமும் காலை உதயத்தில் கீழ்வானம் வெளுக்கும். பிறகு சூரியன் உச்சிக்கு வரும். பிறகு இறங்கிக களைத்து மலையடிவாரத்தில் தெரியும். மொட்டை மாடி கைப்பிடிச் சுவரில் ஒரு காலை வைத்து கீழே பார்த்தபோது சக்திக்கு லேசாகத் தலை சுற்றிற்று. இந்த நிரந்தரத்தன்மை என்பதே மாயை என்று தோன்றிற்று. எதிரே நிற்கும் கட்டடங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே நொறுங்கி கீழே விழக்கூடும். பிரளயம் வரும். ஏரி மூழ்கிப் போகும். சூரியனை கிரகணம் விழுங்கும். 'ராகுவும் கேதுவும் உன் ஜாதகத்தில் நீசன்'. சக்திவேல் என்பவன் மட்டும்தான் அந்த நீசத்தனத்தை அனுபவிக்க வேண்டுமா என்ன?

இந்தத் தெருவில் இரண்டே இரண்டு அடுக்கு மாடிக் கட்டிடங்கள். சூழலோடு ஒட்டாமல், கட்டிடங்களுக்குப் பக்கவாட்டில் குடிசைப் பகுதி. சம்பந்தமில்லாமல் போன வாரம் எதிர்த்தாற் போலிருக்கும் அடுக்குமாடியின் மொட்டை மாடியிலிருந்து ஒருத்தன் விழுந்தான். அவனுடைய மனைவி பெரிய அலறலாய் பத்தாவது பால்கனியில் நின்று அலறியபோது, சக்தி தனது பால்கனிக்குச் சென்று பார்த்தான். ஒரு ஆள் இறக்கை விரித்து விழுந்த பட்சிபோல் கட்டாந்தரையில் விழுந்திருந்தான். சித்திரம் வரைந்தது போல் எப்படி இவன் விழுந்திருக்கிறான் என்று சக்தி நினைத்துக் கொண்டான். மனைவி பால்கனியில் நின்றபடி, அலறிக் கொண்டிருந்தாள். பல பால்கனிகளில் பலர் வந்து நின்றார்கள். குடிசைப் பகுதியிலிருந்துதான் திமுதிமுவென்று கூட்டம் வந்து உடலைச் சுற்றி நின்றது.

சக்தி கைப்பிடிச்சுவர் மேல் இருந்த காலை மெல்ல கீழே இறக்கினான். உயிர் போகாமல் கால் மட்டும் முடமாகிப் போகலாம். விதியின் நீசதனத்திற்கு அளவு உண்டா என்ன?

அவன் வீட்டிற்குள் சத்தமில்லாமல் நுழைந்தபோது, "எங்கேடா உன்னை ஆளையே காணும்?" என்றாள் அம்மா. "சும்மா மொட்டை மாடிக்குப் போயிருந்தேன். காத்து வாங்க".

"காத்து வாங்க மொட்டை மாடிக்கு ஏன் போகணும்?" என்றாள் அம்மா சந்தேகத்துடன்.

"அங்கேதான் காத்து நிறைய இருக்கு" என்றான் அவன் சாதாரணமாய். அம்மா பதில் சொல்லவில்லை. எதிர்த்த கட்டிடத்துப் பெண் பத்து நிமிஷம் அலறின மாதிரி அம்மாவும் அலறியிருப்பாள். அவன் தன் அறைக்குச் சென்று தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளும் சமயத்தில் அம்மா சொன்னாள்.

''தாழ்ப்பாள் போட்டுக்காதே'' அவனுக்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது. "என்னது இது, பச்சைக் குழந்தையை விரட்டற மாதிரி விரட்டறே?"

அம்மா சற்று திகைத்து, சுதாரித்துக் கொண்டாள்.

"இருக்கிற இரண்டு ரூமிலே ஒண்ணை நீ அடைச்சிக்கிட்டா இடம் பத்துமா சக்தி?"

அவன் பதில் ஏதும் சொல்லாமல் கோபத்துடன் கதவுகளை படாரென்று திறந்துவைத்துவிட்டு ஜன்னலுக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான். காரணம் புரியாமல் கண்களில் நீர் முட்டி இமைகளைக் குத்திற்று. சக்தி. சக்தி. அவனுக்கு அந்தப் பெயர் சூட்டியவர்களுக்கு மிக அபத்தமான ஹாஸ்ய உணர்வு இருந்திருக்க வேண்டும் அல்லது ஒரு எதிர்பார்ப்பின் கற்பனையாகவும் இருந்திருக்கலாம். அந்தக் கற்பனையில் அவனே இதுவரை மிதந்திருக்கிறான். என்ன வந்தாலும் எதிர்கொள்வேன் என்ற இறுமாப்புடன். ராகுவும், கேதுவும் நீசனாக இருந்தாலும். கீழே புல்வெளியில் வெயில் ஏறுவது நினைவில்லாமல் இரண்டு குழந்தைகள் 'ஸீஸா' ஆடிக்கொண்டிருந்தன. முதல் மாடியிலிருந்து பார்க்கும்போது மிகக் கிட்டத்தில் தெரிந்தன. மேலே போகும் போது பெண் குழந்தை கெக்கிலி பிக்கிலி என்று சிரித்தது. விளம்பரக் குழந்தைபோல முத்துப்பல் வரிசை மின்னிற்று. கீழே இறங்கும்போது இறுக்கமாய் முகத்தை வைத்துக் கொண்டது - கீழே விழாமல் தன்னைத் தற்காத்துக் கொள்வதுபோல. சக்தி சற்று நேரம் அந்தக் குழந்தையை தன்னை மறந்து சுவாரஸ்யத்துடன் பார்த்தான். இந்த முதல் மாடி 'ஃப்ளாட்டை வாங்கியதே அவன் சௌகர்யத்துக்காக. மின்சாரம் தடைப்பட்டு லிஃப்ட் வேலை செய்யாவிட்டாலும் கவலைப்படாமல் படி ஏறி விடலாம் என்பதற்காக. தீராத சில கடன்களில் ஃப்ளாட் வாங்கிய கடனும் சேர்த்தி. அப்பாவுக்குக் கடன் வாங்குவது கைவந்த கலையாகி விட்டது. அடுத்தாற்போல் சுந்தரிக்கு ஆகவேண்டிய கல்யாணத்துக்கு கடன்வேட்டை ஆயத்தங்களில்

இருக்கிறார். அப்பா ஒருவேளை பத்தாவது மாடியில் இருந்திருந்தால் அந்த ஆள் போனவாரம் விழுந்தமாதிரி கீழே விழுந்திருப்பார். இறக்கை விரித்த பட்சி மாதிரி. பால்கனியிலிருந்து அம்மா அலறியிருப்பாள்.

"இந்தா காபி".

தூக்கிவாரிப் போட்டவனாய் அவன் திரும்பினான். சுந்தரி லேசான புன்னகையுடன் காபி டம்ளரை நீட்டினாள்.

"மேஜை மேல் வெச்சுடு" என்றபடி அவன் மீண்டும் புல்வெளியைப் பார்த்தான். "உள்ளே நுழையறதுக்கு முந்தி கதவைத் தட்டிட்டு வரக்கூடாது?"

"ஏன், நீ என்ன அன்னியனா? இது நம்ம வீடுதானே?" என்று அவள் சிரித்தாள்.

இவளால் எப்படி இப்படி சிரிக்க முடிகிறது என்று அவனுக்கு எரிச்சல் வந்தது.

"நாகரீகம்னு பேரு அதுக்கு".

"ஓ. ஸாரி" என்றாள் அவள் நையாண்டிப் புன்னகையுடன். ஸீஸா மேலே ஏறிற்று. செக்கிலி பிக்கிலி என்று பெண் சிரித்தது.

"எமன் மட்டும்தான் வரலாம் சொல்லாம கொள்ளாம."

சுந்தரி சடாரென்று திரும்பி அவனை சில வினாடிகள் பார்த்தாள். இன்னமும் மேஜைமேல் வைக்காத காபியை ஒரு ஆற்று ஆற்றி ஒரு பகுதியை அவனிடம் நீட்டினாள்.



"முதல்ல குடி".

குழந்தையைப் போல் அதை வாங்கிக்கொண்டு அவன் டம்ளரை வாய்க்கு நேராக உயர்த்திப் பருக ஆரம்பித்தான். காபியின் சூடு இதமாக நெஞ்சுக்குழியில் இறங்கியபோது சுந்தரியை நிமிர்ந்து பார்க்கக் கூச்சமாக இருந்தது. அவன் குடித்து முடித்ததும் அவள் மெல்லச் சொன்னாள்.

"சக்தி உனக்கு நா ஒரு சின்ன அட்வைஸ் தரேன். ஏதாவது வெளியூர் போயிட்டு வா. ஏர்க்காடுக்கோ, கோவாவுக்கோ ஒரு வாரம் போயிட்டு வா. இந்த ரூமிலே அடைஞ்சு கிடக்காதே. கைச் செலவுக்கு நா வேணா பணம் தரேன்".

"நோ தாங்க்யூ" என்றான். அவன் அடிக்குரலில் "என்னை தயவு செய்து தனியே விடறியா?"

அவள் மறுவார்த்தை பேசாமல் அகன்றாள். அவனுக்கு வருத்தமாக இருந்தது. கூடவே வீம்பு தோன்றிற்று. என்னைப் பத்தி நீங்கள்லாம் என்ன நினைச்சாலும் எனக்கு ஆகப்போறது ஒன்னும் இல்லே. அவன் படுக்கையில் படுத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டான். கண்ணை மூடுவதற்கு முன் காலண்டர் கண்ணில் பட்டது. மூடிய கண்களுக்குள் மார்ச் மாத பக்கம் படபடத்தது. அவன் செல்வதாக இருந்த யேல் பல்கலைக்கழகப் புகைப்படம். யு.எஸ்.ஐ.எஸ். வாசக சாலையில் இருக்கும் அவனது நண்பன் ஸ்ரீதர் கொடுத்த காலண்டர். அங்கு சீட்டும் உபகாரச் சம்பளமும் கிடைத்திருப்பதாக இவன் போய்ச் சொன்னதும் லைப்ரரியில் பதுக்கி வைத்திருந்த காலண்டரை ஸ்ரீதர் எடுத்துக் கொடுத்தான்.

"உன்னை மாதிரி புத்திசாலி ஆசிரியர்களை நம்பித்தான் அமெரிக்க அரசு இயங்கிட்டு இருக்கு" என்று ஐஸ் வைத்தான். "விசா கிடைச்சுடும். ஆனா உனக்கு ஹார்ட் பிராப்ளம் இருக்குன்னு தெரிவிச்சுடு. ஆபரேஷன் ஒரு தடவை ஆகியிருக்குன்னு தெரிவி. அங்கே ஏதாவது உடம்புக்கு வந்தா உடனடியா கவனிப்பாங்க."

சரி... சரி... சரி... தரையில் கால்பாவாத நாட்கள் அவை. கண்ணை மூடினால் யேல் பல்கலைக் கழகப் புல்வெளிதான். மனசை முழுவதும் பசுமையாக்கிற்று. புல்வெளியில் கால் பதியாத அங்குலம் இல்லை. அங்கு படிக்கப்போகும் படங்களிலும், அவன் காண்பிக்கப் போகும் திறமைகளிலும் ஒவ்வொரு வினாடியும் மனது மிதந்தது.

இத்தனை கெட்டிக்கார இளைஞனுக்கு இதயக் கோளாறா? நோ ப்ராப்ளம். எங்கள் மருத்துவ விஞ்ஞானம் மிக நவீனமானது. உன்னை சரி செய்து விடுவோம் செலவா? அதைப் பல்கலைக் கழகம் பார்த்துக் கொள்ளும். ஸ்ரீதர் தினமும் கற்பனைக்கு உரம் போட்டான். அதிகம் சிரித்துப் பேசாத அப்பாகூட தெம்பாக வளைய வந்தார். அப்பாவின் முகத்தில் சிரிப்பு வராததற்கு தான் எந்த வகையிலோ காரணம் என்று அவன் நினைத்திருக்கிறான். பரீட்சைக்காக அவன் இரவு கண் விழித்துப் படிக்கும்போது "போறுன்டா படிச்சது, படு" என்பதில் கனிவுக்கு பதில் கடுப்பு இருப்பதாகத் தோன்றும். மூச்சு இறைக்க மைதானத்தில் கால்பந்து ஆடும்போது "வீட்டுக்கு வறியா இல்லையா?" என்று அவர் அங்கு வந்து முகம் சிக்கக் கத்தும்போது, இந்த அப்பாவுக்கு ஏன் பிறந்தோம் என்று நொந்திருக்கிறான். ஃபஸ்ட் வந்திருக்கேன்பா என்று ப்ராக்ரஸ் ரிப்போர்ட்

நீட்டினால் புன்னகை மலராது. பெருமூச்சு வெடிக்கும். அன்று ஆபரேஷன் தியேட்டருக்குள் மறையு முன்பு மூலையில் நின்றபடி குலுங்கி அழும் அப்பாவின் உருவத்தை மட்டும் பார்த்திராவிட்டால், அவர் தனது அப்பாதானா என்று இன்று அவரை அவனுக்கு சந்தேகம் வந்திருக்கும். இப்பொழுதெல்லாம் அப்பா அவனெதிரில் வருவதே இல்லை. பேயைக் கண்டு அரண்டிருப்பவர் போல் இருக்கிறார். ஆபரேஷன் மேஜையிலேயே அவன் இறந்திருந்தால் யாருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டிராது. இப்போது நடுக்கூடத்தில் இருக்கும் டைம்பாமை எப்படி அப்புறப்படுத்துவது என்று புரியாமல் விழிக்கிறார்கள்.

அவனுக்கு கடகடவென்று சிரிக்க வேண்டும் போலிருந்தது. பாட்டி முன்பு சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது. ஊரில் ஒரு கிழவி இருந்தாளாம். ஒருநாள் அவள் கட்டை மாதிரி கிடக்க எல்லாரும் இறந்து விட்டாள் என்று ஒப்பாரி வைத்து அழுது சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமானபோது கிழவி எழுந்து உட்கார்ந்து "எதுக்கு இத்தனை சனங்க வந்திருக்காங்க, எழவு வூட்டுக்கு வந்ததைப் போல'' என்றாளாம். மறுபடியும் எல்லாரும் அழுதாங்க என்று சிரித்தாள் பாட்டி. ஆனால் ஆபரேஷன் முடிந்து ஒருவருஷம் ராஜோபசாரம் நடந்தது. அவனே ஆகாயத்தில் பறந்தான். புதுப்பிறவி எடுத்துபோல உடம்பில் உற்சாகம் இருந்தது. சிகிச்சை செய்த டாக்டரே கடவுளாகத் தோன்றினார். இப்போது அந்தக் கடவுளே அவனைப் பார்க்க மறுக்கிறார். எப்பொழுது டெலிபோன் செய்தாலும் ''அவங்க ஆபரேஷன் தியேட்டர்லே இருக்காங்க'' என்கிறார்கள். பல சமயங்களில் கோபத்தில் அசிங்கமாகத் திட்டியிருக்கிறான். ஒட்டுமொத்தமாக சபித்திருக்கிறான்.

தனது சாபத்துக்கு எந்த பலனும் இல்லை என்று அவனுக்குத் தெரியும். சபிக்கப்பட்டவனின் சாபத்துக்குப் பலன் கிடையாது. நினைவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு தப்பிச் செல்ல மார்க்கமில்லாதது மாதிரி. அவனுக்கு நினைவு இருக்கிறது. உடலைப் பற்றின பூரணபிரக்ஞை இருக்கிறது. அதை என்ன செய்வது என்றுதான் புரியவில்லை. எட்ட நின்று தனது உடலை சுவரில் மாட்டியிருக்கும் காலண்டரில் மாட்டி கூறுபேட்டு ஆராய்ந்திருக்கிறான். தலையிலிருந்து கால்வரை அதன் உறுப்புகளை, அவற்றின் அழிவின் சாத்தியக் கூறுகளை, அனாடமி மாணவன்போல் ஆராய்ந்திருக்கிறான். கிடைத்த புத்தங்களையெல்லாம் அறை முழுவதும் பரப்பிக் கரைத்துக் குடித்திருக்கிறான். உறுப்புகளை பூதக்கண்ணாடி கொண்டு பார்க்கும் போது உயிரணுக்களும் செல்களும் யார் கட்டுக்கும் அடங்காமல் போனது தெரிகிறது. சிவகாமியின் சபதத்தில் வரும் நாகநந்தி போல தன்னிடமிருந்து வெளிப்படும் மூச்சே விஷம் என்று அச்சமேற்பட்டது. சென்ற மாதம் அண்ணன் செந்தில் வந்திருந்தான். நளினமாய் மனைவி ராதா. கழுக் மழுக்கென்று பத்துமாதக் குழந்தை. உற்சாகமான பேச்சில் இருந்த கூடம் அவன் உள்ளே நுழைந்ததும் கப்சிப்ஜென்று அடங்கிப்போயிற்று. தரையில் தவழ்ந்த குழந்தை அவனைக் கண்டதும் கிடுகிடுவென்று வந்து காலைக் கட்டிக்கொண்டது. தண்ணென்ற அதன் ஸ்பரிசம் பட்டதும் அவன் திக்குமுக்காடிப் போனான். குழந்தையை வாரித் தூக்கி அணைக்கும் தருணத்தில் ராதா பாய்ந்து வந்து பிடுங்கிக் கொண்டாள். 'ஐயோ வேண்டாம்' என்று பதறினாள். செந்திலின் முகத்தில் ஈயாடவில்லை.

சக்திக்கு அதிர்ச்சி நீங்க சற்று நேரம் பிடித்தது. 'என் மனைவி ஒண்ணும் தெரியாதவ. தப்பா நினைக்காதே' என்று செந்தில் சொல்லவில்லை. 'அதுக்குத்தான் இங்க வர்றதுக்கே எனக்கு பயமாயிருக்கு' என்று முணுமுணுத்தான். அன்று சுந்தரி அங்கு இல்லை. இருந்திருந்தால் செந்திலை ஒருபிடி பிடித்திருப்பாள். அப்பாவும் அம்மாவும் வாயைத் திறக்கவில்லை. அவர்களே பயப்படுகிறார்கள். அன்று இரவு அவன் தோற்றுப் போனவனை போல தலையணைக்குள் முகத்தைப் புதைத்து நெஞ்சு வெடிக்க அழுதது நினைவு இருக்கிறது. இத்தனை அழுகைக்கும் அரைகுறையாகவே இயங்கும் இதயத்துக்கும் ஒன்றும் ஆகவில்லை. பொட்டென்று மூச்சு நிற்கவில்லை. உயிரை மாய்த்துக்கொள்ள ஒரு முறை எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்தது. விழுங்கிய மாத்திரைகளின் குப்பியை சுந்தரி பார்த்துவிட்டாள். மூர்ச்சையாகும் தருணத்தில் ஆஸ்பத்திரிக்குத் தள்ளிக்கொண்டு போனார்கள். மொட்டை மாடி முயற்சி ஒவ்வொரு முறையும், 'கால் மட்டும் முடமாகிப்போனால்' என்ற கேள்விலேயே முடங்கிப்போகிறது. முடங்குவதற்கு இன்னொரு காரணம் உண்டு. சாவதற்கு முன்பு ஒரு பயணம் செய்தாக வேண்டும்.

அறைக்குள் யாரோ சத்தமில்லாமல் நுழைந்திருந்த மாதிரி இருந்தது. எமனா? அதற்குள்ளாகவா? குப்பென்று அவனுக்கு வியர்த்தது. அவன் கண் திறந்தபோது அம்மா நின்றிருந்தாள். அவன் சோர்வுடன் எழுந்து உட்கார்ந்து குனிந்து சட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''ஒண்ணு சொன்னா கோவப்பட மாட்டியே?'' என்றாள்.

"என்ன,இடத்தைக் காலி பண்ணுங்கறியா?" என்றான் சுள்ளென்று. "நானும் காத்துக்கிட்டுதானே இருக்கேன்!"

''இதப்பார், பெத்தவகிட்ட நீ இப்படி பேசறது நியாயமேயில்லை. நா சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா கேளு. எனக்கு இதைச் சொல்ல எத்தனை வேதனையா இருக்கு தெரியுமா?"

அம்மாவுக்கு துக்கத்தில் குரல் தழுதழுத்தது. கண்ணீர் வந்துவிடும் போல் இருந்தது. இதெல்லாம் அவனுக்குப் பழக்கம். ''சொல்லு'' என்றான் ஆயாசத்துடன்.

''வர்ற வெள்ளிக்கிழமை சுந்தரியை பெண் பார்க்க வர்றாங்க''.

அவன் பேசாமல் இருந்தான். சென்ற ஞாயிறன்று யாரோ வந்திருந்தார்கள்.

''அன்னிக்கு வந்தவங்க இஷ்டமில்லேன்னுட்டாங்க''.

என்ன காரணம் என்று அவன் கேட்கவில்லை.

''என்னை என்ன செய்யச் சொல்றே? போன வாரம் மொட்டை மாடியிலிருந்து ஒரு ஆளு விழுந்தானே, அப்படி விழவா?" அம்மா அழ ஆரம்பித்தாள். அவனுக்கு மார்பு படபடத்துக் கொண்டு வந்தது. மூச்சு முட்டிற்று.



''உங்கிட்டே எதுவுமே பேச முடியல்லே" என்றாள் அம்மா. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ''எல்லாத்துக்கும் ஏடாகூடமாப் பேசற. என்னுடைய கஷ்டத்தை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே?"

அவன் பதில் பேசாமல் கட்டிலிருந்து இறங்கி ஜன்னலைப் பார்த்தபடி நாற்காலியில் அமர்ந்தான். புல்வெளியில் இப்போது யாருமே இல்லை. உச்சி வெயில் சூட்டில் பசுமைப் வெளிறிப் போயிருந்தது.

''நாலைஞ்சு நாள் சித்தி வீட்டிலே போய் இருக்கியா?"

அவன் சடக்கென்று அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் இருந்த பீதியைக் கண்டு மனசு மெல்ல அதிர்ந்தது.

''கோவிச்சுக்காதே சக்தி. என்ன செய்யறதுன்னு புரியாமத்தான் இப்படி யோசனை சொல்றேன்".

அவனுக்குப் படபடத்துக் கொண்டு வந்தது. நாபியிலிருந்து வெடித்த துக்கத்தில் தொண்டை அடைத்து வார்த்தைகள் புதையுண்டு போயின. சிதறல்களாகிப் போன எண்ணங்கள் வார்த்தைகளில் அடங்காமல் திமிறின. விரல்களில் ஏற்பட்ட நடுக்கத்தை அவள் பார்க்கக்கூடாது என்று நாற்காலியை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

"விஷயத்தை மறைக்கப்போறீங்களா?"

''பிறகு சொல்லிக்கலாம். சுந்தரியைப் பிடிச்சுப் போச்சுன்னா, அப்புறம் பக்குவமா சொல்லிக்கலாம். புரிஞ்சுப்பாங்க."

காலையில் சுந்தரி அவனிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

''கொஞ்ச நாள் எங்கேயாவது போயிட்டு வா. ஏர்க்காடுக்கோ, கோவாவுக்கோ?"

இதை மனசில், வைத்துத்தான் அவளும் சொல்லியிருக்க வேண்டும். இதை நம்புவது கஷ்டமாக இருந்தது. அடிமனத்தில் வலித்தது. அவன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பிறகு மெல்லச் சொன்னான்.

"சரி போரேன். ஆனா சித்தி வீட்டுக்கு இல்லே."

"பின்னே எங்கே?"

"எங்கேயோ. அது உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லே."

''என்னடா சக்தி. கோவத்திலே ஒண்ணுகிடக்க ஒண்ணு செஞ்சிடாதே. தலைவிதின்னு இருக்கிறதை நாம என்ன செய்ய முடியும் "

"சுந்தரி சொன்னா, கோவாவுக்கோ ஏர்க்காடுக்கோ போயிட்டு வாயேன்னு. அப்படித்தான் எங்கேயாவது போகப் போறேன்."

அவன் மறுநாளைக்குக் கிளம்பியபோது அம்மாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

"எதப்பத்தியும் யோசனை செய்யாதே. கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருந்துட்டு வா'' என்று சுந்தரி சிரித்து வழியனுப்பினாள். குற்ற உணர்வில் அவன் சுறுங்கிப் போனான்.

இரண்டு இரவுப்பொழுது பிரயாணத்தின்போது கண் இமைக்க முடியாமல் மனசு கொந்தளித்தது. இத்தனை

நாள் அடக்கி வைத்திருந்த கோபத்தை எல்லாம் அவன் முன் கொட்டும்போது அவன் அதில் மெழுகாய் உருக வேண்டும் அல்லது கருகிப்போக வேண்டும். மனத்துள் கனன்று கொண்டிருப்பது ஒரு எரிமலை. தீப்பிழம்பு. "பார் உன்னால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்'' என்று சாட்டையடியாய் காறி உமிழ வேண்டும். சேதி அறிந்ததும் கோழையைப் போல் ஊரைவிட்டுஓடினாயாமே? உன்னை என்றாவது பார்க்காமல் என் உயிர் பிரியுமா? கடந்த நான்கு வருடங்களாக உன்னை சும்மா விடமாட்டேன் என்ற வெறி பேயாய் அலைக்கழித்திருந்தது. நீ தெரிந்து செய்யவில்லைதான். ஆனால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்று பார்க்கக்கூடத் துணிவில்லாமல் ஓடி ஒளிந்தவன் நீ. எப்படியோ ஏதேச்சையாக விலாசம் கிடைத்தது.

அவன் அழைப்பு மணியை அழுத்தியதும். ''கௌன்?'' என்று ஒரு பெண்ணின் குரலுடன் கதவு திறந்தது. முதலில் பெண்ணின் குரலுடன் பளீரென்ற ஒரு முகம் தெரிந்தது. பிறகு அதில் இழையோடிய சோகம் புலப்பட்டது. கழுத்துப்பட்டை எலும்பு துருத்தி நிற்கிற ஒல்லி தேகவாகு. "நடராஜனைப் பார்க்கனும். என் பெயர் சக்திவேல். மெட்ராஸிலேந்து வரேன்''.

''ஓ'' என்றாள் அந்தப் பெண். சட்டென்று புரிந்து கொண்டவளாக. சற்று கவலையுடன் உள்நோக்கிப் பார்த்தாள்.

''இங்கே உட்காருங்க'' என்று வரவேற்பறையைக் காண்பித்தாள். சின்ன வரவேற்பறையில் பிரதானமாகத் தெரிந்தது சுவரில் இருந்த புகைப்படம். இந்தப் பெண் நடராஜனுடன். இவளாகத்தான் இருக்க வேண்டும். கன்னமும் கதுப்புமாக. அம்மாவும் அப்பாவுமாக கல்யாணத்துக்குப் போயிருந்தார்கள். இவனுக்கு ஆபரேஷன் முடிந்து நான்கு மாதத்தில். அவனது படப்படப்பை கவனியாதவள் போல் அவள் புன்னகைத்தாள். "நான்தான் சரளா. மிஸஸ் நடராஜன். உட்காருங்க. நா காபி கொண்டு வரேன்."

"எந்தவித உபசரிப்புக்காகவும் நா வரலே. அவனைப் பார்த்து பேசிட்டு நா கிளம்புனும்." என்றான் சிரமத்துடன். அவள் முகத்தில் புன்னகை மறந்தது. கவலைச் சுருக்கங்கள் தோன்றின. அவனுக்கு அம்மாவின் நினைவு வந்தது. ஆனால் இவள் முகத்தில் பீதி இல்லை. வேறு என்னவோ.

"சரி வாங்க பார்க்கலாம்" ஆனா பேச முடியாது.

''நீங்க அப்படிச் சொல்றது உங்களுக்கு சுலபம்'' என்று படபடத்த படி அவளை அவன் பின்தொடர்ந்து அடுத்த அறைக்குச் சென்றான். கட்டிலில் அமர்ந்திருந்த அந்த உருவத்தைப் பார்த்து அவனுக்கு தூக்கிவாரிப்போட்டது. அவள் சொல்வது சரி. இந்த உருவத்திடம் பேச முடியாது. மூளையின் இயக்கத்தை இழந்த வெறும் மாமிசப் பிண்டம் இது. மிதமிஞ்சிய ஏமாற்றம் அவன் நெஞ்சை ஆழ்த்திற்று. அடேய் இப்பவும் தப்பிச்சுட்டே.

அவன் அமர்வதற்காக அவள் நாற்காலியை இழுத்துப் போட்டாள். கட்டிலுக்கு மேல் நடராஜனின் புகைப்படம். ஸ்மார்ட்டாக பைலட் உடையில் வரிசைப் பற்கள் தெரிய புன்னகையுடன். வானம் என் வசம் என்ற புன்னகை. பத்து வருஷங்களுக்கு முன்பு பாகிஸ்தான் எல்லையில் இருந்தபோது பெரியப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. இள ரத்தம் தனியா இருந்தபோது தெரியாத்தனமா தப்பு தண்டா நடந்திருக்கலாம். இப்படியாகும்ன்னு யாரு கண்டது.?

"எத்தனை நாளா இப்படி?

"ஆறு மாதமா''.

அவன் தலையைக் குனிந்து கொண்டான். இங்கு வந்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டதாக தோன்றிற்று. பிறகு திடீரென்று நினைவு வந்தவன்போல்..

"நீங்க? நீங்க தப்பிச்சிட்டிங்களா?'' என்றான். அவள் மிக லேசாக புன்னகைத்தாள்.

"இல்லே, எப்படி தப்பிக்க முடியும்?"

அவள் முகத்தில் இருந்த சாதாரண அமைதி அவனுக்கு அச்சத்தை அளித்தது.

"குழந்தை இருக்கா?"

''இருக்கு. ஆனா நல்லவேளை அதுக்கு இல்லே. எங்க அம்மா அப்பாகிட்டே வளருது ஊர்லே.

கட்டிலில் இருந்து நடராஜனின் உடம்பிலிருந்து உருமுவது போல ஓசை கேட்டது. அழும் குழந்தையை சமதானப்படுத்துவதுபோல் அவள் அவன் மார்பைத் தட்டினாள்.

"உங்களுக்கு இவன்மேல் கோபம் இல்லே?"

அவள் சிறிது மௌனத்துக்குப் பிறகு ''இல்லே'' என்றாள் நிதானமாக. உங்களுக்காக இவங்க துடிச்ச துடிப்பு எனக்குத் தெரியும். எனக்காகப் பதறிப்போனது எனக்குத் தெரியும். தனக்காக இவங்க பயப்படலேன்னு எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

சக்தி குழப்பத்திலே துவண்டு போனவனைப் போல் உட்கார்ந்திருந்தான்.

''இல்லே, எனக்குக் கோபம் இல்லை'' என்றாள் அவள் மீண்டும். எனக்கு ரொம்ப நல்ல புருஷனா இருந்திருக்கார். திருமணத்துக்குப் பிறகு இவர் எனக்குத் துரோகம் செய்யலே. எனக்குத் தெரியும். நா தீர்மானிச்சுட்டேன். ரெண்டு பேரும் சாகப் போறோம். அப்ப கோபப்பட்டு நிலைமையை மோசமாக்கிக்கக் கூடாது. என் வாழ்க்கையைக் கெடுக்கனும்னு இவர் என்னைக் கல்யாணம் செய்துக்கலே. உங்களுக்கு ரத்தம் கொடுத்தபோது இவங்களுக்கு விஷயம் தெரியாது. உடனடியா ரத்தம் செலுத்தலேன்னா நீங்க செத்திருப்பீங்க சக்தி. இன்னிக்கு நீங்க உயிரோட இருக்கிறது இவருடைய ரத்தத்தினாலே".

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவள் சிரித்தாள். அபத்தமான உண்மையை நினைத்து அவனுக்கும் சிரிப்பு வந்தது.

அவள் சிரித்துக்கொண்டே தொடர்ந்தாள். ''நீங்க இன்னும் கொஞ்ச வருஷம் உயிர் வாழணும்னு இருக்கு. யோசிச்சுப் பாருங்க. உங்க ஆபரேஷன் சமயத்திலே நடராஜன் லீவிலே ஊருக்கு வந்ததும், அவசர நிலையிலே ரத்தம் தேவைப்பட்டதும், பெரியப்பா பையன் நான், ஒரே க்ரூப் ரத்தம். நான் தரேன்னு இவர் முன்வந்ததும் எதேச்சையாவா நடந்திருக்கும்?"

அவன் திகைப்புடன் எழுந்தான்.

நடராஜன் உடல்மேல் இருந்த போர்வையை அவள் சரிசெய்தபடி "காபி சாப்பிடறீங்களா?" என்றாள்.

''சரி. நா இங்கே இரண்டு நாள் தங்கிட்டுப் போனா உங்களுக்குத் தொந்தரவு இல்லையே?"

அவள் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைக் கண்டு வெகுநாட்களுக்குப் பிறகு அவனுக்கு மனசு லேசாயிற்று. வரவேற்பறையில் அந்த புகைப்படத்தைப் பார்த்தபடி இருந்த சோபாவில் இரவு படுத்து வெகுநேரம் கழித்து வந்த தூக்கத்தில் சிதறல் சிதறலாகக் கனா வந்தது. யேல் பல்கலைக் கழக புல்வெளியில் நடக்கிறான். வானவில்லைக் கையில் ஏந்தியபடி அமெரிக்கன் கான்ஸலின் விஸா கௌன்டருக்கு முன் நிற்கிறான். ஒரு வெள்ளைக்கரம் ஒரு காகிதத்தை நீட்டுகிறது

"ஸாரி" விசா மறுக்கப்படுகிறது.

''உங்களுடைய ரத்தப்பரிசோதனை முடிவைப் பாருங்கள்.

கண்களை இடுக்கிப் பார்க்கிறான். விழிகள் பிதுங்குகின்றன. எச்.ஐ.வி. பாஸிட்டிவ்...

சக்தி புரண்டு புரண்டு முனகினான். தூர்தர்ஷனில் எய்ட்ஸைப் பற்றி மன்மதனும் ரதியும் உபதேசம் செய்கிறார்கள். எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இதுவரை எந்தப் பெண்ணுடனும் படுத்ததில்லை. எந்த ஆணுடனும் முட்டாளே - அறுவை சிகிச்சை எப்பாவாவது நடந்ததா? நடந்தது. ரத்ததானம் பெற்றாயா? ஆமாம். என் அண்ணன் அவன். பெரியப்பா மகன். நல்லவன். நடராஜன் செத்துப்போனப்புறம் உங்களை யார் பார்த்துப்பாங்க? யாராவது, இவரை நான் பார்த்துக்கறமாதிரி, யாராவது - இந்த நாட்டிலே மனுஷங் களுக்காக பஞ்சம்? கடவுளே, இவளால் எப்படி இப்படி சிரிக்க முடிகிறது? சீஸாவில் மேலே செல்லும்போது சிரிக்கிற பெண் மாதிரி.



அவன் ஊர் திரும்பிய போது அவனைக் கண்டு எல்லார் முகத்திலும் நிம்மதி தோன்றியது போலிருந்தது.

''அவங்க கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்களா?'' என்று சுந்தரியிடம் ரகசியமாகக் கேட்டாள்.

''இல்லே'' என்று அவள் சிரித்தாள்.

"விஷயத்தை மறைச்சுமா?"

''ஏன் மறைக்கணும்?'' என்றாள் கோபமாக.

''ஜனங்களுடைய மனசை முதல்லேயே தெரிஞ்சுக்கிறது நல்லது. இவங்க இல்லேன்னா என்ன, மனுஷத்தனம் கொண்டவங்க வேற இல்லாமயா போயிடுவாங்க, இத்தனை பெரிய ஜனத்தொகையிலே?" அவளுடைய சிரிப்பு சரளாவை ஞாபகப் படுத்துகிறது. ஜன்னல் வழியே அவன் பார்த்தபோது சூரியனின் ஒளிப் பிழம்புகள் நாலாபக்கமும் பரவி யிருந்தன. சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி பறவையினமும் மனித இனமும் இயங்க ஆரம்பித்தன. 'எதுவுமே எதேச்சையாக நடப்பதில்லை' என்று தோன்றிற்று. □

# தாய்ப் பால்



இன்றைய நாகரீக உலகில் தாய்ப்பால் ஊட்டுவதென்பது நலம் பயக்கும் என்று விளம்பரம் செய்ய வேண்டியதுள்ளது. இயற்கையாகவே ஊறுகின்ற பாலைத் தன் உதிரத்தில் உதித்த குழந்தைக்கு கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்த, உலக அளவில் ஆண்டுதோறும் 'ஊக்குவிப்பு வாரம்' நடத்தப்படுகிறது.

பல ஆராய்ச்சிகள் தாய்ப் பாலூட்டுவதால் தாய்க்கும் சேய்க்கும் ஏற்படும் பெரும் நன்மைகளை விளக்குகின்றன. கடந்த 60 ஆண்டுகளாக உலகெங்கும் குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டுவது அதிகம் குறைந்துள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணம் பன்னாட்டுக் குழந்தை உணவு உற்பத்தியாளரின் உண்மையற்ற விளம்பரமும், நெறியற்ற வியாபார உத்தியுமேயாகும். முன்னாள் யூனிசெப் தலைவர் திரு.ஜேம்ஸ் கிராண்ட் "புட்டிப்பால், குழந்தைகள் அதிகம் இறப்பதற்கு முக்கியக் காரணமாகும்" என்கிறார். உதாரணமாக,

★ ஒரு நாளில் இறக்கும் குழந்தைகள் எண்ணிக்கையானது, போபால் விஷவாயு விபத்தில் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாகும்.

★ ஒரு மாதத்தில் இறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை, ஹிரோஷிமா அணுகுண்டு தாக்குதலால் இறந்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும்.

★ ஒரு வாரத்தில் இறக்கும் குழந்தைகள் எண்ணிக்கையானது, ஆர்மினிய பூகம்பத்தில் இறந்தவர்கள் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாகும்" என்றும் அவர் கூறினார்.

புட்டிப்பாலால் உண்டாகும் பெரும் தீமைகள், அதிக இறப்புகள் முக்கியச் செய்திகளாகி மக்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை.

இந்தச் சூழ்நிலையில் உலகளவு முயற்சிகளின் விளைவாக உலக சுகாதார நிறுவனம் **(WHO)** தாய்பாலூட்டுவதைப் பாதுகாத்து, புட்டிப்பால் பெருக்கத்தைத் தடை செய்ய ஒரு விதித் தொகுப்பை நிறைவேற்றியது. நம் நாட்டில் இது சட்டமாக்கப்பட்டது. "குழந்தை நுகர்வோரை"ப் பாதுகாக்கும் சிறந்த சட்டமாகும் இது. பல மகப்பேறு மருத்துவமனைகள் தாய்ப் பாலூட்டும் கொள்கைகள் வகுத்து, இந்தச் சட்டத்தைச் செயல்முறையில் நிறைவேற்ற முயற்சிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து 7ஆம் தேதி வரை உலகத் தாய்ப்பாலூட்ட ஊக்குவிப்பு வாரமாகக் கொண்டாடப்படுகிறது. அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் "தாய்ப் பாலூட்டும் கலாச்சாரத்தை மீண்டும் கொண்டு வரும் மும்முறை முயற்சிகளுக்கு இது ஊக்கமளிக்கிறது. இந்த ஆண்டு தலைப்பு, தாய்ப் பாலூட்டுதலால் ஏற்படும் நன்மைகள் யாவை என்பதாகும்.

**பொருளாதார முன்னேற்றம்**

அ. இந்தியாவில் 25 மில்லியன் பாலூட்டும் தாய்மார்கள் ஓர் ஆண்டிற்கு 12,000 கோடி ரூபாய் மதிப்புள்ள பாலைச் சுரக்கமுடியும்; இது நாடு முழுவதும் மருத்துவத்திற்கென்று ஒதுக்கும் மொத்த நிதியை விட 6 - 8 மடங்கு அதிகம். அதே அளவு அந்நியச் செலாவணியும் குறையும்.



ஆ. குழந்தைக்கு, மாதத்திற்குத் தேவையான பவுடர் பாலின் விலை ரூ.1,000/- அதனைத் தயாரிக்க எரிபொருள், தண்ணீர், புட்டி, சோப்பு, பிரஷ் போன்றவற்றிற்கு ரூ.250-500 கூடுதலாகவும் தயாரிக்கும் நேரமும் வீணாகிறது. இந்தப் பணத்தில் 6 பேருக்கு நல்ல உணவு அளிக்க முடியும். புட்டிப் பால் அருந்தும் குழந்தைகள் அதிகம் நோய்வாய்ப்படுவர். மருத்துவச் செலவு அதிகரித்து, தாய் பணிக்குச் செல்ல இயலாத நிலையில் வருவாயும் குறையும்.

தாய்ப்பால் - குறிப்பாகக் குழந்தைப் பராமரிப்புத் தொடர்பான வீண் செலவைக் குறைக்கிறது.

**உடல்நல மேம்பாடு**

**நோய்த் தடுப்பு**

கருவில் சுகாதாரமான சூழ்நிலையில் வாழும் குழந்தையானது, சுத்தமற்ற கிருமிகள் நிறைந்த சூழலில் பிறக்கிறது. குழந்தை பிறந்து முதல் மூன்று நாட்களில் சுரக்கும் நல்ல நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் அதிகம் ஊட்டமுள்ள சீம்பால் அல்லது சீயம்பால், பலநோய்களிலிருந்து காப்பாற்றுகிறது. புட்டிப்பால் அருந்தும் குழந்தைகள் தாய்ப்பாலருந்தும் குழந்தைகளை விடப் பன்மடங்கு நோய்வாய்ப்படுவார்கள்.

யூனிசெஃப் கணிப்பின்படி, வறுமைக் குடும்பங்களில் புட்டிப்பால் அருந்தும் குழந்தைகள் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளைவிட 25 மடங்கு இறக்கும் அபாயமுள்ளது.

பவுடர் பாலில் நோய்க்கிருமிகள், விஷப் பொருட்கள், நுண்அணுக்கதிர் போன்ற தூய்மைக் கேடுகள் உள்ளன. பால் தயாரிக்கும் நீரும் சுத்தமற்று, நோய்கள் உண்டாகின்றன.

ஆஸ்துமா, கரப்பான் போன்ற ஒவ்வாமை நோய்களிலிருந்து குழந்தைப் பருவத்திலும் வளர்ந்த பின்னும் பாதுகாப்பளிக்கிறது.

குழந்தைப் பருவத்திலும் பின் பெரியவர்களானதும் பலவகைப் புற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் குறைகிறது.

வளர்ந்த பின்பு நீரிழிவு நோய், இருதய நோய், இரத்த அழுத்தம் உண்டாவதும் இதனால் குறையும்.

பிறந்த குழந்தைக்குச் சில மாதம் வரை சிலர் வெறும் தண்ணீரே கொடுப்பார்கள்; இது தவறு. தாய்ப் பால் கொடுத்தால் தண்ணீரேகூட தேவையில்லை. 4 மாதத்திற்குப் பிறகு வேறு உணவு தரலாம்.

> **நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும். ஒன்று நம் உள்ளம்;**
> **மற்றொன்று உடம்பு;**
> **மூன்றாவது சுற்றுப்புறம்.**
> **நாம் விரும்பினால், உள்ளத்தை முழுதும் நன்றாக வைத்திருக்க முடியும்.**
> **ஆனால், எல்லோரும் சேர்ந்து விரும்பினால்தான், சுற்றுப்புறத்தை நன்றாக அமைக்க முடியும்.**
>
> **- டாக்டர் மு.வ.**

**சிறந்த ஊட்டம்**

பாலூட்டும் பிராணிகளின் பால், அதனதன் குட்டிகளின் வளர்ச்சி மற்றும் தேவைக்கேற்ப அமைந்துள்ளது. தாய்ப்பால் குழந்தையின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சிக்கேற்ப அமைந்துள்ளது. குழந்தையின் பிரத்தியேக ஊட்டத் தேவைக்கு ஏற்ப வேளைக்கு வேளை, நாளுக்கு நாள், மாதத்துக்கு மாதம் மாறுகிறது.

புட்டிப்பால், செயலற்ற பவுடர் கலந்த நீர்தான் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

தாய்ப்பால் தாயிடம் சுரந்து நேராகக் குழந்தைக்குக் கிடைக்கிறது. நீர் எரிபொருள் தேவையில்லை. குப்பைகள் சேர்வதில்லை. இதனால் சுற்றுச்சூழல் தூய்மை கெடுவதில்லை.

**தாய் பெறும் நன்மைகள்**

கருத்தடை : இந்தியாவில் தாய்மார்கள் முறைப்படி தொடர்ந்து இரண்டு ஆண்டு காலம் தாய்ப்பால் கொடுத்தால் பிறப்பு இடைவெளி அதிகரித்து ஆண்டிற்கு 5 மில்லியன் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கலாம். தாய்சேய் நலம் மேம்படும்.

தாய்ப் பாலூட்டிய பெண்களுக்குப் பிற்காலத்தில் மார்பு, கருப்பை புற்றுநோய்கள் அதிகம் ஏற்படுவதில்லை என்பது முக்கியமான செய்தியாகும்.

தாய்க்கும், சேய்க்கும் பாசப்பிணைப்பு உண்டாகி, தாயின் மனஉளைச்சல் குறைந்து மனநலத்தையும் காக்கிறது.

எனவே, தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்பது போல, தாய்ப்பாலை விடச் சிறந்த குழந்தை உணவும் இல்லை என்பதை எல்லாப் பெற்றோர்களும் உணர வேண்டும்.

✸ ✸ ✸

# தெரிந்து கொள்வோம் !

**வினாக்கள் :**

1. சூரியனுக்கு வெகு தொலைவில் உள்ள கோள் எது?
2. இந்தியா அணுகுண்டு சோதனையை எங்கு நடத்தியது?
3. மனிதனின் சராசரி இதயத் துடிப்பு நிமிடத்திற்கு எத்தனை முறை?
4. பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு?
5. காசநோய் உடலில் எந்தப் பகுதியை அதிகம் தாக்குகின்றது?
6. தமிழகத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
7. இந்தியாவில் வெளியான முதல் பத்திரிகையின் பெயர் என்ன?
8. இந்தியாவின் தேசிய விளையாட்டு எது?
9. கடைசியாக நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி எந்த ஊரில் நடைபெற்றது?
10. அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்கு ஒரே ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்று தந்த வீரர் யார்?
11. இந்தியாவின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம் எது– அது எங்கு உள்ளது?
12. யார் தலைமையில் இந்தியா கிரிக்கெட் போட்டியில் உலகக் கோப்பையை வென்றது?
13. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதன் முதலில் 10,122 ரன்களை எடுத்த இந்திய கிரிக்கெட் வீரர் யார்?
14. இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் கோப்பையை வென்ற நாடு எது?
15. முதன்முதலில் விண்வெளியில் பயணம் மேற்கொண்ட நாடு எது?
16. உலக அதிசயங்களில் ஒன்றே ஒன்று இந்தியாவில் உள்ளது – அது எது?
17. இந்தியாவில் முதன் முதலில் எந்த ஆண்டு, எந்த இடத்தில் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது?
18. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் பெயர் என்ன?
19. உச்சநீதி மன்றத்தின் முதலாவது பெண் நீதிபதி யார்?



– இந்த வினாடி வினாக்கள் திரு.வி.முத்துக்குமார் என்ற மாணவரால் கேட்கப்பட்டவை; பதில்சொல்லப்பட்டவை. இதிலென்ன அதிசயம் என்கிறீர்களா? அவர், பார்வையற்ற நிலையிலும் பி.ஏ. மூன்றாமாண்டு படித்துவரும் 24 வயது இளைஞர். சென்னையில் உள்ள 'நவபாரதம் மாணவர்கள் நல அறக்கட்டளை'யில் ஒருவர்; 'தொலைபேசி இயக்குநர்' தேர்வின் பல பிரிவுகளிலும் வெற்றி பெற்றிருக்கிறார். தம் நண்பர்களான வி.ராஜு, ஜே.விஜய் ஆனந்த் ஆகியவர்களோடு பள்ளிகள் தோறும் சென்று எல்லோரும் வியக்கும்படி 'வினாடி–வினா' நிக்ழ்ச்சி நடத்திவரும் இவர் தந்தையார் எம்.வைரக்கண்ணுவும் ஒரு மாணவரே; ஆம், சென்னையில் சட்டம் படித்து வருகிறார். பிரசவத்தின்போது இவர் மனைவியார் பிரேமா மஞ்சள் காமாலை நோய்க்கு ஆளானதால், மகன் முத்துக் குமார் பார்வையிழந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள் என்றார்,அவர்.

– பி.எல்.ஆர்.

**விடைகள் :**

1. புளூட்டோ.
2. பொக்ரான்.
3. 72 முறை.
4. 2,38,855 மைல்கள்.
5. நுரையீரல் பகுதியை.
6. 29 மாவட்டங்கள்.
7. 'பெங்கால் கெஜட்'.
8. ஹாக்கி.
9. அட்லாண்டா.
10. லியாண்டர் பயஸ்.
11. ஈடன் கார்டன். கல்கத்தாவில் உள்ளது.
12. கபில்தேவ் தலைமையில்.
13. சுனில் காவஸ்கர்.
14. பிரான்ஸ்.
15. ரஷ்யா.
16. தாஜ்மகால்.
17. 1959ல், தில்லியில்.
18. மன்மோகன்சிங் லிபரான்.
19. பாத்திமா பீவி.



# நீர் ஆதாரம்: நீர் ஆய்வு மையத்தின் பங்கு

தமிழக அரசு 1974 ஆம் ஆண்டு நீரின் வளம் பற்றியும் நீரின் பயன் மற்றும் நீர் வளத்தினை பெருக்குவது குறித்தும் கொள்கைகளை வகுப்பது தொடர்பாக துணைபுரிய நீர் ஆய்வு நிறுவனத்தினை உருவாக்கியது. பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறியாளரை இயக்குனராகக் கொண்ட இந்நிறுவனத்தில் பொறியாளர்கள், நீர்ப் புவியலாளர்கள், புவிவேதியியலாளர்கள், புவிஇயற்பியலாளர்கள், வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் என பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் உள்பட 80 பேர் பணி புரிகின்றார்கள்.

**நீர் ஆய்வு நிறுவனத்தின் பணிகள்**

அ. நீர்வளத்தினைக் கணித்தல்.

ஆ. தற்கால மற்றும் எதிர்கால நீர்த் தேவைகளை மதிப்பீடு செய்தல்.

இ. ஆற்று நீர்பிடிப்பரப்புகளில் நீர் வளத்தினைப் பயன்படுத்த சட்டதிட்டங்களை வகுக்க ஆவன செய்தல்.

ஈ. நீர்வளத்தினை மிகைப்படுத்தவும், பாதுகாக்கவும் வழிவகைகளைக் காணுதல்.

உ. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி

**நீர்வள ஆதாரங்கள் அமைப்பில் நீர் ஆய்வு நிறுவனத்தின் பங்கு**

நீர்வள ஆதார அமைப்பிற்குக் கொள்கை மற்றும் ஆலோசனை வழங்குவது நீர் ஆய்வு நிறுவனத்தின் பணியாகும். மேலும் நீர் தொடர்பான பிரச்சினை களையும், சுற்றுச்சூழலின் பிரச்சினைகளையும் அரசுக்கு எடுத்துச் சொல்வதும் இதன் பணியாகும். ஆற்று நீர்பிடிப்பரப்புகளிலிருந்து கிடைக்கும் நீர், பல்வேறு இனங்களுக்குத் தேவைப்படும் நீரின் அளவு இவற்றைக் கணக்கிடுதல் மற்றும் மாநில அளவிலான நீர்த்திட்டம் உருவாக்குவதும் இதன் கடமையாகும். மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த உதவியுடன் மாநிலத்தின் எல்லா ஆற்றுப்படுகைகளிலும் நீர்த்தேவைகள் கணக்கிடப்பட்டு திட்ட நிலைகள் மேற்கொள்ளப்படும். இது தவிர துறைகளினால் கோரப்படும் குறிப்பிட்ட நீர் தொடர்பான பிரச்சினைகளும் ஆய்வு செய்யப்படுகிறது.

**நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை**

நீண்டகாலப் பயனைக் கருத்தில் கொண்டு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்து முறைப்படுத்துதல், பல துறைகளின் நீர்த் தேவைகளைச் சரியான அளவில் பங்கீடு செய்தல், மேலாண்மை செய்தல் ஆகியவைகளைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட "நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை" ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த அவை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் ஆகியோரை துணைத்தலைவர்களாகக் கொண்டுள்ளது. இதன் உறுப்பினர் – செயலாளராக நீர் ஆய்வு நிறுவன இயக்குநர் உள்ளார். இதன் தலைமைச் செயலகமாக நீர் ஆய்வு நிறுவனம் செயல்படுகிறது.

உலக வங்கிக் குழு தனது மூன்றாவது தணிக்கையின் போது நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவையின் கீழ் ஐந்து துணைக் குழுக்களை உருவாக்கப் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் தமிழக அரசு 4 கீழ்க்கண்ட துணைக் குழுக்களை உருவாக்கியுள்ளது.

1. பாசன மற்றும் வேளாண்மை பிரிவுக்குழு
2. நகர்ப்புற மற்றும் ஊரகக் குடிநீர் மற்றும் கால்நடை நீர்த்தேவை மற்றும் சுகாதாரப் பிரிவுக்குழு
3. மின் மற்றும் தொழிற்சாலை பிரிவுக்குழு
4. நிலத்தடி நீர் ஒழுங்குபடுத்தும் பிரிவுக்குழு

மேலும் சுற்றுபுறச் சூழல் பிரிவுக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி நீர் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவெடுத்து வருகின்றன. இந்நாள் வரை மொத்தம் 17 கூட்டங்கள் இந்த ஐந்து துணைக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன.

நீர் தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடிய பிரச்சினைகள் நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவைக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றன.

## தமிழ்நாடு நீர்வளக் கொள்கை

இந்நிறுவனம் தமிழ்நாட்டின் 'நீர்கொள்கை' யினை வகுத்து அதனைச் செயலாக்க தமிழக அரசுக்கு ஜனவரி 94ல் சமர்ப்பித்தது. தமிழக அரசு இதற்கு ஒப்புதல் அளித்ததுடன், இக்கொள்கையின் செயலாக்கத்தை நீர் ஆய்வு நிறுவனம் செயலாக்கும் என அறிவித்துள்ளது.

## நீர் ஆய்வு நிறுவனத்தின் பணித்திட்டம்

அ. ஏப்ரல் 1995 முதல் மார்ச் 1996 வரை – மாநில அளவிலான நீர் வளத்திட்டத்தினை ஆற்றுப் படுகையின் தேவைகளைக் கணக்கிட்டு மாநில அளவில் முன்னோடித் திட்டத்தினை உருவாக்குதல்.

ஆ. ஏப்ரல் 1996 முதல் மார்ச் 1998 வரை – ஆற்றுப் படுகைக்கான விரிவான திட்டத்தினை ஒவ்வொரு ஆற்றுப் படுகைக்கும் உருவாக்குதல் மற்றும் மாநில நீர்த் திட்டத்தினை உருவாக்குதல்.

இ. ஏப்ரல் 1998 முதல் 2005 மற்றும் அதன் பிறகும் ஆற்றுப்படுகைகளின் நடப்பு புள்ளி விவரங்களைச் சேகரித்து அன்றைய நிலையின் தேவைக்கேற்ப கணக்கிட்டு மாநில நீர்த் திட்டத்தினை மேம்பாடு செய்தல்.

## சாதனைகள்

தமிழ்நாட்டில் உள்ள 17 ஆற்றுப்படுகைகளில் இதுவரை நீர் ஆய்வு நிறுவனம் 16 ஆற்றுப் படுகைகளை ஆய்வு செய்துள்ளது. (காவிரி ஆற்றுப்படுகை இன்னும் எடுத்துக்கொள்ளப் படவில்லை) இந்த 16 ஆற்றுப்படுகைகளின் நீர்வளம் மற்றும் நீரின் தேவை, மேலாண்மை போன்றவற்றின் ஆய்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் கண்டுபிடிப்புகள் நீரினைப் பயன்படுத்தும் துறைகளுக்கும், கொள்கைத் திட்டங்களை வகுப்பவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்நாள் வரை, 'நீரினைப் பயன்படுத்துவோர்' கூட்டங்கள் 10 வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. மேலும் ஒன்பது கூட்டங்கள் மார்ச் 1999க்குள்ளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டங்களில் நீரினை பயன்படுத்துவோர் கூறும் கருத்துகளும், பரிந்துரைகளும் மாநில அளவிலான நீர்வள முன்னோடி திட்ட அறிக்கையில் சேர்க்கப்படும். ஆற்றுப்படுகைக்கான நீர் வளத்தினை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தில் இவை கருத்தில் கொள்ளப்படும்.

## தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டம்

தமிழகத்தில் சில பகுதிகளில் நீர் பற்றாக்குறை நிலவுகிறது. மேலும் தமிழகத்தில் நீர்வளம் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு விட்டது. வருங்காலப் பொருளாதார மேம்பாடு, பல்வேறு துறையினருக்கும் வழங்கப்படும் நீரின் அளவினையும், அவர்கள்



**மடி** பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின் கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்



அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக்கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!

**- கலைஞர்**

அதனை பயன்படுத்தும் திறனையும் பொருத்துள்ளது. குறிப்பாக வேளாண்மையில், நீரினைப் பயன்படுத்தும் திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்கு ஒருங்கிணைந்த திட்டம் மூலமாக வேளாண் வளர்ச்சியினை அதிகரிக்க இயலும். இதன் தொடர்பாக தமிழக அரசு உலக வங்கியின் நிதி உதவி கோரியது. அதன் விளைவாக தமிழ்நாடு நீர்வளங்கள் நிலைப்படுத்தும் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் நீர்வளத்தினை நல்ல முறையில் திட்டமிட்டு, மேலாண்மை செய்து, நீர் வளத்தினை அதிகரித்து பாசனப் பிரிவின் மூலமாக வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வகை செய்கிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.807.49 கோடி ஆகும்.

### தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டத்தின்கீழ் நீர் ஆய்வு நிறுவனத்தினை வலுப்படுத்துதல்

இத்திட்டத்தின் மூலம் ரூ. 23.478 கோடி மதிப்பீட்டில் நீர் ஆய்வு நிறுவனம் வலுப்படுத்தப்பட உள்ளது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் பயிற்சி அளித்தல், அறிவியல் கருவிகள் மற்றும் பொருள்கள் வாங்குதல், கட்டட வசதிகள் செய்தல் போன்றவைகள் இத்திட்டத்தின் முக்கியப் பணிகள் ஆகும்.

முதல் கட்டமாக ரூ.2.762 கோடிக்கு உடனடித் தேவைகளான அறிவியல் கருவிகள் வாங்குதல் மற்றும் கணிப்பொறி மையக் கட்டடம் கட்டுதல் போன்றவற்றை மேற்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் கணிப்பொறி மையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டத்தில் நீர் ஆய்வு நிறுவனத்தினை வலுப்படுத்த ரூ.14.17 கோடிக்கு திட்டமிடப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### நீராய்வு நிறுவனத்தில் தொலையுணர்வு மையப் பணிகள்

நிலநீர்ப் பிரிவின்கீழ் இயங்கி வந்த தொலையுணர்வு மையமும் நிழற்பட நிலவியல் ஆய்வகமும் 1.2.1997 முதல் நீராய்வு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டன. 1968ஆம் ஆண்டு, மற்ற மாநிலங்கள் தொலையுணர்வு குறித்த விவரம் அறியா நிலையில், தொலையுணர்வு குறித்த ஆய்வு, தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் தொடங்கி விட்டது. ஆகாய விமானம் மூலம் தமிழகத்தின் பாலாற்றுப் படுகை, காவிரியாற்றுப் படுகை, சென்னைப் படுகை, வெள்ளாற்றுப் படுகை முதலிய படுகைகளுக்கான கருப்பு வெள்ளை புகைப்படங்கள் 1:10,000 அளவில் எடுக்கப்பட்டு இப்படுகைகளுக்கான நிலவகை, நிலவியல், நிலவியற்பியல், பெரும்பாறை பிளவுக்கோடு விவர வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு நிலநீர் ஆய்வுக்கு உபயோகப்படுத்தப்பட்டன. மைய அரசு நிறுவனங்களான இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தோடும் தேசிய தொலையுணர்வு நிறுவனத்தோடும் இணைந்து தென் தமிழ்நாட்டு மாவட்டங்களில் பல்வேறு நோக்க ஆய்வுகளுக்காகவும், பொன்னையாற்றுப் படுகையில் பல்வேறு நீர் குறித்த ஆய்வுகளுக்காகவும், இந்தத் தொலையுணர்வு மையம், அறிக்கைகளையும் வரைபடங்களையும் தயாரித்து மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் சமர்ப்பித்தது.

இந்த தொலையுணர்வு மையம் மாவட்ட, வட்ட, ஒன்றிய ரீதியாக விமானம் மூலம் எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை புகைப்படங்களை ஆய்வு செய்ததன் மூலமும், செயற்கைக் கோள் மூலம் பெறப்பட்ட வண்ண புகைப்படங்கள் மூலமாகவும் தேவையான நோக்க வரைபடங்களான, நிலவியல், நிலவியற்பியல், மண்வகை, நீர்ப்போக்கு, நிலவகை, பெரும்பிளவுப்பாறைக் கோடுகள் குறித்த வரைபடங்களை தயாரித்துள்ளது.

இம்மையத்தில் தமிழகம் முழுமைக்கான விமான மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், செயற்கைக் கோள் மூலம் பெற்ற வண்ணப் புகைப்படங்கள் ஆகியவை காகிதப் படிவத்தில் உள்ளன. கணிப்பொறியில் பயன்படுத்தக்கூடிய வகையில் 'சிடி ராம்' போன்ற மென்பொருள் வடிவத்திலும் தமிழகம் முழுமைக்கும் (காவிரிப் படுகை நீங்கலாக) விவரங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இம்மையம் பாலாற்றுப் படுகைக்கும், பரவனாற்றுப்படுகைக்கும், பொன்னையாற்றுப் படுகைக்கும், வைகையாற்றுப் படுகைக்கும் பல்நோக்கு வரைபடங்களையும், விவரங்களையும் தொலையுணர்வு ஆய்வு மூலம் தயாரித்துள்ளது.

தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்பு திட்டத்தின்கீழ் மிக விலையுயர்ந்த, மிக நவீன விஞ்ஞானக் கருவிகளான, நிலவியற்பியல் தகவல் அமைப்பு மென்பொருட்கள் பெருவதற்கு ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.1.5 கோடி அளவிற்கு நவீன கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. இந்திய செயற்கைக்கோள் 1–சி, 1–டி மென்பொருள் மூலமும்

நிலவியற்பியல் தகவல் அமைப்பு மென்பொருள் மூலமும் அனைத்து ஆற்றுப் படுக்கைகளுக்கும், தமிழ்நாட்டின் அனைத்து பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நீராய்வு குறித்த விவரங்களுக்காகவும் வரைபடங்கள் மற்றும் விவரங்கள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசுத் துறைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இல்லாத மிக நவீன விஞ்ஞானக் கருவிகளும் மற்றும் செயற்கைக்கோள் விவரங்களும், நீராய்வு நிறுவனத்தின் தொலையுணர்வு மையத்தில் தான் பெறப் பட்டுள்ளன.

**சுற்றுப்புறச்சூழல் பிரிவு**

இன்றைய சூழ்நிலையில் தற்போது உள்ள பாசன ஆதாரங்களை நவீனப்படுத்தி அவற்றை திறம்பட நிர்வகித்து உணவு உற்பத்தியினைப் பெருக்குவது அவசியம் ஆகும். இத்திட்டத்தின் செயல்பாட்டின் போது சுற்றுப்புறச் சூழல் பாதிப்பின்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இது தொடர்பாக கீழ்க்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற நீர் ஆய்வு நிறுவனத்தில் ஒரு சுற்றுப்புறச் சூழல் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

- சுற்றுப்புறச் சூழல் தொடர்பாக கொள்கைகளை வகுத்தல், வழிமுறைகள், நடைமுறைகள், சட்டங்கள் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.
- சுற்றுப்புறச் சூழலின் பிரச்சினைகள் தொடர்புள்ள துறைகள் மத்திய மற்றும் மாநில அரசு, தனியார் துறை நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்.
- சுற்றுப்புறச் சூழல் நிபுணர்களின் பட்டியலை தயாரித்தல் மற்றும் நீர்வளத் திட்டங்களுடன் தொடர்புள்ள சுற்றுப்புறச் சூழல் கணிப்பு அறிக்கைகளை மறு ஆய்வு செய்தல்.
- அரசு ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுடன் தொடர்புகொண்டு சுற்றுப்புறச் சூழல் திட்டங்களை மேற்கொள்ளல்.
- புவி மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றின் தரம் பற்றிய விவரங்களை சேகரித்து கணிப்பொறியில் பிற்கால பயனுக்காகச் சேமித்தல்.

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் இப்பிரிவு மாநிலத்தின் பல பகுதிகளில் கருத்தரங்குகளை நடத்தி மக்களிடையே சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிப்பின் விளைவுகளை அறியச் செய்து வருகிறது. இது தவிர மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் நீரின் தரம் பற்றிய புள்ளி விவரங்களையும் சேகரித்து வருகிறது. ஒவ்வொரு ஆற்றுப்படுகைக்கும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழக அரசு சுற்றுப்புறச் சூழல் துணைக் குழு ஒன்றினை உருவாக்கி உள்ளது. இதன் பணி அரசுக்குச் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான கொள்கைகளை வகுப்பது ஆகும். இதன் உறுப்பினர் – செயலாளராக நீர் ஆய்வு நிறுவன இயக்குநர் உள்ளார்.

## 1997-98ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

**அ. ஆற்றுப்படுகையின் திட்டம் - மேம்பாடு செய்தல்**

வைகை, பாலாறு ஆற்றுப்படுகைகளின் நுண்ணியல் மட்ட நீர் வளத்திட்டத்திற்கான அறிக்கைகளை மேம்பாடு செய்து தயாரித்தல், மாநில அளவிலான முன்னோடித் திட்டத்தை மேம்பாடு செய்தல்.

**ஆ. சுற்றுப்புறச் சூழல் ஆய்வுகள்**

வைகை ஆற்றுப்படுகைகளில் உள்ள சுற்றுப்புறச் சூழல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நீரின் தரம் முதலியவற்றை ஆய்வு செய்தல், தற்போது உள்ள சட்டதிட்டங்கள் மற்றும் அரசு ஆணைகளை சேகரித்து மறு ஆய்வு செய்தல்.

**இ. நீர் ஆய்வு நிறுவனத்தினை வலுப்படுத்துதல்**

- அறிவியல் கருவிகள், தளவர்டங்கள், நிலவியற்பியல் தகவல் அமைப்பு மென்பொருள் போன்றவற்றை தொலையுணர்வு ஆய்வுக்கூடம், புவிவேதியியல் ஆய்வுக் கூடம் ஆகியவற்றிற்கு வாங்குதல்.
- நீர் ஆய்வு நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- கணிப்பொறி மையம் ஏற்படுத்துதல் மற்றும் வாகனங்களை நிறுத்தக் கட்டடம் கட்டுதல்.

**ஈ. சிறப்பு ஆய்வுப் பணிகள்**

இப்பணி வாயிலாக மூன்று தலைப்புகளில் பணிகள் செய்யப்பட உள்ளன. இப்பணிகள் கி.பி. 2002இல் முடிக்கப்படும்.

- இயக்கமும் பராமரிப்பும்
- நிலநீர் கணித மாதிரி தயாரித்தல்
- வேளாண்மைப் பிரிவு ஆராய்ச்சிப்பணி

**உ. கலந்தறிதல் பணிகள்**

தற்பொழுது இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த டஹால் நிறுவனத்தின் கருத்துக்கள் பெற தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான செலவு தொகை ரூ.26.83 கோடிகள் ஆகும். இதன்படி 9 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இவற்றுள் நீர்வள முன்னோடித் திட்டமும் ஒன்றாகும். இதற்காக பாலாறு, வைப்பாறு, கோதையாறு ஆகிய மூன்று ஆற்றுப்படுகைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் தற்பொழுது தொடங்கப்பட்டுள்ளன.

**ஊ. நீர்வள ஆதார ஆராய்ச்சி நிதி**

இதன் கீழ் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக 9 தலைப்புகள் கண்டறியப் பட்டு ஐந்து நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இதற்கான விவரங்கள் அரசின் ஏற்புக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. □

# தற்கால வெளிப்பாடு தமிழ் அழகியல்

கலை வெளிப்பாடு என்பது காற்றிலிருந்து பிறப்பது அல்ல. அசலான கவிதையின், சிற்பத்தின் ஓவியத்தின் ஊற்றுக் கண்ணாக இருப்பது வாழ்க்கைதான். தற்காலத் தமிழனின் வாழ்க்கையில் உயிர்த்துடிப்புடன் இருக்கிற யதார்த்தம், ஒரு கலை, கலைப் படைப்பாளியின் வெளிப்பாட்டுக்கு உதவி செய்ய முழுமனதுடன் காத்திருக்கிற்து. இன்றைய தமிழனின் தற்கால யதார்த்தத்தில், அவனது பண்டைய தமிழ்க் கலை மரபுகளும் – சங்ககாலம் தொட்டு இன்று வரை – உயிர்த்துடிப்புடன் கலந்து வாழ்ந்து வருகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவற்றைக் காய்தல், உவத்தல் அற்ற விமர்சனப் பார்வைகளுடன் அடையாளம் காண்பதும், அவற்றை மீள் கண்டுபிடிப்புச் செய்து பயன்படுத்துதலும், இன்றைய கலைவெளிப்பாட்டை அசல் தன்மையுடைய ஒன்றாக உயர்த்தும். இவற்றைப் பற்றி சற்று சிந்திப்போமானால் தமிழனுக்கு என்று தனியான ஒரு அழகியலை நாம் கட்டி எழுப்ப முடியும்.

1. நவீன ஓவியங்கள் நிறைந்துள்ள ஒரு கலை அரங்கினுள் பார்வையாளன் ஒருவன் நுழைகிறான். அவனது பார்வை ரீதியான அழகியல் அனுபவத்தின் பின்புலத்திற்கேற்ப அவன் அந்த ஓவியங்களுக்கு எதிர்வினை யாற்றுகிறான். இன்றைய தமிழகத்தின் பிரபல ஓவியர் கே.எம்.ஆதிமூலத்தின் அரூப ஓவியம் ஒன்றை அவன் காண்கிறான். உடனே அவன் அந்த ஓவியத்தின் வண்ணங்களின் கலவை மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தாலும், அது தனக்குப் புரியவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறான்.

இது எதனால் நிகழ்கிறது?

தனக்குப் புரியாத மொழியால் – தெலுங்கு மொழியில் பாடப்படும் தியாகராஜ கீர்த்தனையை ரசித்து மகிழ்கிற தமிழர்களும் கூட, ஆதிமூலத்தின் ஓவியம் மட்டும் புரியவில்லை என்று குறை கூறுகிறார்கள். இது ஏன்? தியாகராஜ கீர்த்தனையை ரசிப்பது எப்படி என்ற குறைந்தபட்சப் பயிற்சியாவது அவன் பெற்றிருக்கிறான். ஆனால் நவீன ஓவியத்தை ரசிப்பது எப்படி என்கிற பயிற்சி அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனைப் பார்வையாளருக்குக் கொடுக்க வேண்டும் என்கிற அக்கறை தமிழகத்து ஓவியர்களுக்கும் இல்லை; அது பற்றிப் பாராட்டிப் பேசுகிற விமர்சகர்களுக்கும் இல்லை.

அடுத்ததாக, நவீன ஓவியங்கள் புரியவில்லை என்று குறைபடுகிற எத்தனைத் தமிழர்கள் நமது சித்தன்ன வாசல், திருப்பருத்திக்குன்றம் போன்ற இடங்களிலுள்ள ஓவியங்களைச் சென்று பார்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள்? தொன்மையான நமது கோயில் சிற்பத் தூண்களைச் சுற்றி (குறிப்பாக மதுரையின் மீனாட்சி அம்மன்கோயில்) கடைத்தெருக்களை அமைத்துள்ள நாம் எந்த அளவுக்கு அவற்றின் கலை அழகு குறித்துக் கவனம் எடுத்துக்கொண்டோம். அதுதான் இல்லை என்றால், அவற்றைப் பேணிக்காப்பதிலும், அவற்றைச் சிதைக்காமல் இருப்பதிலும் நாம் எந்த அளவுக்கு அக்கறை செலுத்தினோம். இவற்றை நாம் செய்யாமல் திடீரென்று நவீன ஓவியம் புரிவதில்லை என்று குறைபட்டுக் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

மேலும், மரபு ரீதியான நமது கலை வெளிப்பாடுகளைப் புரிந்துகொள்ளாமல், நவீன கலை வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வதும் கடினமாகும்.

உதாரணமாக, சென்னை கலைத்தொழில் கல்லூரியின் இன்றைய முதல்வர் அல்போன்சோ அருள்தாஸ் படைக்கும் நவீன நடராஜ ஓவியங்களை எடுத்துக் கொள்வோம். தமிழன் உலகக் கலைச் செல்வத்திற்கு அளித்த ஒரு பரிசான ஆடல் வல்லானின் செப்புத் திருமேனியின் கலைத் தத்துவத்தை எந்த அளவுக்குப் புரிந்து கொண்டுள்ளோமோ அந்த அளவுக்கு அல்போன்சோவின் நவீன ஓவியத்தையும் புரிந்துகொள்ளும் வல்லமை பெற்றுவிடுகிறோம். அல்போன்சோவின் தற்காலத்

– இந்திரன்

தன்மை கொண்டு நடராச ஓவியங்களில் தமிழனின் கலைமரபு மீள்கண்டு பிடிப்பு செய்யப்பட்டு, புதிய வெளிப்பாடு அடைகிறது. இங்கே நான் சொல்லும் தமிழ் அழகியல் என்பது செயல்படுகிறது. தமிழ் அழகியல் நவீன வெளிப்பாட்டுக்கு மேலும் செழிப்பூட்டுவதாக அமைகிறது.

**2.** தற்காலக் கலைஞன் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகிறான், பழங்காலம், நிகழ்காலம், உள்நாடு, வெளிநாடு, தனிமனித சில வெளிப்பாடு, சமூகத்தின் கூட்டுக்காரணங்கள் ஆகியவை அவனை அலைக்கழிக்கின்றன. தொழில்நுட்பத்தால் மாற்றமடையும் சமுதாயமும், பூமியியலும், பண்பாட்டு அமைப்பிற்கான பொருளாதாரமும், அவனுக்குப் பின்னால் நின்று அவனது பொம்மலாட்டக் கயிறுகளை அசைக்கின்றன.

இதனால், ஒரு இலக்கியப் படைப்பு என்பதை எடுத்துக்கொண்டால் அது தனித்துவமானதாகவும், தனித்துவமற்றதாகவும் உள்ளது. மாறிவரும் உலகத்துடன் சேர்ந்து தமிழனின் கலைவெளிப்பாடும் மாற்றமடைகிறது. இந்த மாற்றம் தற்காலக் கலை, இலக்கியத்தின் மீது மட்டுமல்லாமல், பழங்கால இலக்கியம் பற்றிப் புரிந்துகொள்வதிலும் பல மாற்றங்களைக் கொண்டுவருகிறது. இதனை இந்தியாவின் முக்கியச் சமூக விமர்சகரான ஆஷிஸ் நந்தி கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

★ நிகழ்காலத்துடன் உறவுகொண்ட கடந்தகாலம்

★ முறிந்துபோன நிகழ்காலம்

(இது கடந்த காலத்துடன் போட்டியிடுவது)

★ நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் சீரமைப்பது

★ புதிய கடந்தகாலம்

இத்தகைய ஒரு இயக்கத்தைத்தான் தமிழ்க்கலை மரபை மீள்கண்டுபிடிப்புச் செய்தல் என்று நான் குறிப்பிடுகிறேன். இதனால் கலை மரபு என்பது தற்கால **வெளிப்பாட்டிற்கேற்ப** புதிய வடிவமும், புதிய பொருளும் கொள்கின்றன.

ஆனால் தற்காலத் தமிழ்ச் சூழலில் இத்தகைய கடினமான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இல்லாத படைப்பாளிகள், மேலைநாட்டுக் கவிதைகளையும், கலை, இலக்கியப் போக்குகளையும் வெறுமனே போலி செய்வதன் மூலமாக ஒரு அதிர்ச்சிப் பண்பை உருவாக்கி அதையே தங்களது கலைச் சாதனைகளாகக் காட்டிவிடுகின்ற சோகம் இருக்கிறது. நமது பழந்தமிழ் மரபுகளானாலும் சரி, மேலை நாட்டு கலை இலக்கிய மரபுகளானாலும் சரி, அவை தற்காலத் தமிழனின் யதார்த்தத்திற்குப் புறம்பாயிருக்கிற அளவில் அவை கேவலமான போலிப்படைப்புகளே.

**3.** நவீனத்துவம், பின்–நவீனத்துவம், அதி–நவீனத்துவம் போன்ற சொற்கள் தற்காலத் தமிழ் விமர்சன உலகில் பரவலாகக் கையாளப்படுகின்றன. இவற்றைக் கையாள்கிற அளவில் தமிழ்க் கலை, இலக்கிய முயற்சிகள் சர்வதேசத் தன்மை கொண்டதாக வளர்ச்சியடைகின்றன என்று இங்கு நம்பப்படுகிறது.

நவீன கலை என்று சொல்லுகிறபோது அது முதல் உலகப்போருக்கும் பிறகு மேலைநாடுகளில் தோற்றம் கொண்டு, உலகம் முழுவதும் பரவிய ஒரு புதிய போக்கு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் இதன் பொருள் மேலைநாட்டுத்தனம் என்பது அல்ல. நவீன கலை என்பது மேலைநாட்டு நவீன ஓவியங்களைக் கண்மூடித்தனமாகப் பிற்பற்றுவது என்ற முடிவுக்குத் தமிழ்ப் படைப்பாளிகள் வருவார்களேயானால் உலகக் கலை அரங்கில், தமிழ்ப் படைப்பாளிகள் மேலைநாட்டு மேதைகளின் இரண்டாம் தரமான, மூன்றாம் தரமான போலிகள் என்கிற அவப்பெயர்தான் வந்து சேரும். இதன் உண்மையான பலனை நாம் அடையவேண்டுமானால் தற்காலத் தமிழனின் யதார்த்தத்தை புதிய சிந்தனையின் வெளிச்சத்தில் மறுபரிசீலனை செய்ய முனையவேண்டும். இன்றைய சமூகத்தின் கீழ்த்தட்டு மனிதர்கள் என்று நம்மால் கருதப்படுபவர்களிடம்தான் மாசுபடுத்தப்படாத மூலசக்தி கொண்ட கலை, பண்பாட்டுக் கூறுகள் உள்ளவன் என்பதால் அவனிடம் கற்றுக்கொள்ள நமது



நவீன படைப்பாளிகள் முன் வரவேண்டும். இதற்கான சிறந்த உதாரணங்களாகத் தமிழகத்தில் முக்கியச் சிற்பியான மூக்கையாவைச் சிறந்த ஓவியரான பெருமாள் போன்றவர்களைச் சொல்லலாம்.

இவர்கள் தற்காலக் கலைமொழியில், தமிழர்களின் வாழ்க்கையின் எரிக்கமுடியாத அனுபவங்களைப் பேசுகிறார்கள். மூக்கையாவின் பறை அறைபவன், ஜல்லிக்கட்டு, காவடி ஆட்டம் போன்ற சிற்பங்கள் உண்மையான தமிழ் அழகியலைப் பேசுபவை. ஓவியர் சந்துருவின் சித்திரங்களும், ஓவியங்களும் தற்காலத் தன்மையுடன், தத்துவார்த்தமான புரிதலுடன் கூடி இருப்பதை உணரலாம். இவர்கள் அனைவரும் இன்றைய தமிழ் மண்ணில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்துவரும் தமிழ்க் கலை மரபுகளைப் பேசுகிறார்கள்.

**4.** தத்துவம் உண்மையைத் தேடுகிறது. கலை அழகைத் தேடுகிறது என்று சொல்வார்கள். இன்று கலையும் தத்துவத்தைப் போலவே உண்மையைத் தேடத் தொடங்கிவிட்டது. இன்றைய கலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் நேற்றைய கலை முடிவுகளினால் ஏற்படுத்தப்படுகின்றன. காலந்தோறும் வாழ்க்கைக் கலையின் மீது வைக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அழகியல் தன்னை அன்றாடம் புதுப்பித்துக்கொள்கிறது. இதற்கேற்பத் தற்காலக் கலைவெளிப்பாடு மாற்றமடைந்துகொண்டே இருக்கிறது.

எனவேதான் தமிழ்ச் சூழலில் படைப்பாளி என்பவன் சதா கலைவெளிப்பாடு குறித்த அடிப்படை வினாக்களை எழுப்பிக்கொண்டே இருக்க வேண்டியவனாகிறான்.

கலை படைப்பு ஏன் நிகழ்கிறது?

கலை படைப்பு யாருக்காகச் செய்யப்படுகிறது?

கலைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள உறவு என்ன? இத்தகைய வினாக்கள் தீர்மானமான பதில்களைக் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் இந்த வினாக்களுக்கான விடைகளைத் தேடுகிற போது, கலை



பற்றி இதுவரை எழுப்பப்படாத நல்ல பல புதிய வினாக்கள் கிடைக்கலாம்.

அழகியல் எழுப்பும் அடிப்படை வினாக்கள், தமிழனின் அசலான உன்னதப் படைப்புகளைப் படைக்க உதவும்.

தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களுடன் கூடிய உன்னதப் படைப்புகளுடன் உலக அரங்கில் நாம் நமக்கென ஒரு இடத்தைப் பிடிக்கமுடியும்.

**5.** "உள்ளே உயிர் இருக்கிறது. நமக்குள் வலிமையிருக்கிறது. மேல் தோல்தான் காய்ந்து போயிருக்கிறது. அதைக் கழற்றியெறிந்துவிட்டு அதற்கு அப்பால் ஓடுகிற காலநதியிலே ஸ்தானத்தைப் பண்ணி எழ வேண்டும். தற்காலத்துக்குப் பயந்து முற்காலத்துக்குத் தலையை நுழைத்துக் கொள்ளுவோன் செத்தவனுக்குச் ஸமானமே" – என்று பேசுவார் மகாகவி பாரதி.

எனவேதான் தமிழனின் இன்றைய கலைவெளிப்பாடு தற்காலத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். தமிழ் அடையாளம் கொண்டதாக இருக்கவேண்டும். இப்படிச் சொல்வது குறுகிய மொழி வெறிச்செயல் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இது ஒரு கலைப் படைப்பின் நேர்மை குறித்துச் சொல்லப்படுவது ஆகும். பார்க்காத வெளிநாட்டு மலர், நுகராத மேல்நாட்டு நறுமணம், கண்டிராத மேல்நாட்டு ஓவியம், சிலை குறித்து நூல்களில் படித்துவிட்டு அந்தப் பெயர்களைத் தமது படைப்புகளில் வைத்து எழுவதாலேயே தமிழனின் படைப்பு உலகத்தரத்தை எட்டிப் பிடித்துவிட்டதாக நினைக்கக்கூடாது.

நொய்யல், தாமிர பரணி, மணிமுத்தாறு, காவிரி என்று நமது ஆறுகளைப்பற்றிக் கவிதை எழுவது என்பது நேர்மையானது. மாறாக நேரில் கண்டிராத மிசிசிபி நதி பற்றியும், நயாகரா நீர்வீழ்ச்சி பற்றியும் வர்ணிப்பது தமிழனின் நேர்மையின்மைக்குப் பாதகம் சொல்வது ஆகும். வேம்பு, அரசமரம், அரளிப்பூ, கற்றாழை என்று நமது மரங்களும், செடிகொடிகளும் நமது தற்காலத் தமிழ்வெளிப்பாட்டில் காணப்படாமல் போனது ஏன் என்று தெரியவில்லை.

இத்தகைய கலை நேர்மையுடன் நமது கலைப்படைப்பாளிகள் தங்கள் படைப்புகளைச் செய்யத் தொடங்கிவிடுவார்களென்றால், நமது கலைபடைப்புகள் தனக்கெனத் தனியான தமிழ் அடையாளத்துடன் பல தலைகள் கொண்ட ஒரு அசுரனைப் போல் உயிர் பெற்றெழுந்து, பல வாய்களினால் உண்மையான அனுபவங்களைப் பேசத் தொடங்கிவிடும். ★

# ஊராட்சி ஒன்றிய நிலைக் குழுக்கள்

ஊராட்சி ஒன்றியங்களில் நிலைக் குழுக்கள் அமைப்பது பற்றி விரிவான அறிவுரைகளும் விதிமுறைகளும் அரசு வெளியிட்டுள்ளது. எனினும் சில ஊராட்சி ஒன்றியங்களில் இது குறித்து தேவையற்ற பிரச்சினைகள் எழுந்துள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அமைப்பது பற்றி 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 96–ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி பின்வரும் நிலைக் குழுக்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அமைக்கவேண்டும்.

1. நியமனக் குழு
2. வேளாண் உற்பத்திக் குழு
3. கல்விக் குழு
4. பொது நோக்கங்கள் குழு

நியமனக் குழு சம்பந்தமாக அரசின் தெளிவான விதிமுறைகள் அரசு ஆணை எண்.336 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 26.11.97–ல் வெளியிடப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்திக் குழு, ஊராட்சி ஒன்றியக் குழுவே அமைத்துக்கொள்ள 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 96 (1) (பி)–ல் கூறப்பட்டுள்ளது.

கல்விக் குழுவிற்கும் பொது நோக்கங்கள் குழுவிற்கும் உறுப்பினர்களை ஊராட்சி ஒன்றியக் குழு தேர்தல் மூலமாக தேர்வு செய்யும். இதற்கான விதிமுறைகள் அரசு ஆணை எண்.148 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 14.7.98–ல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தவிர ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (Panchayat Union Council) தமக்குள்ள கடமைகளையும், அலுவல்களையும் திறமையுடன் நிறைவேற்றத் தேவைப்படக்கூடிய பிற சிறப்பு நிலைக் குழுக்களையும் அரசின் முன்அனுமதியுடன் அமைக்கலாம். மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சேர்ந்து அரசின் முன் அனுமதியுடன் குறிப்பிட்ட பணிகளுக்காகக் கூட்டு நிலைக் குழுக்களையும் அமைக்கலாம். இந்த நிலைக் குழுக்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங் களுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டு விவாதித்து அறிக்கையை ஒன்றியக் குழுவிற்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், ஒவ்வொரு நிலைக் குழுவின் அதிகாரங்களையும், கடமைகளையும் நிர்ணயம் செய்யும் பொறுப்பும் அந்தந்த ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கே (Panchayat Union Council)

இந் நிலைக் குழுக்கள், அவை களுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்கள் குறித்து ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு ஆலோசனை மட்டுமே வழங்க இயலும். இந்த அறிவுரைகள் மீது இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு மட்டுமே உண்டு.

மேலே குறிப்பிட்டுள்ள விளக்கக் குறிப்பு தவிர தேவையேற்பட்டால் இதுகுறித்து விரிவான அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தெரிவிக்கப்படும். □

# நேரு கண்ட மாமனிதர்கள்

உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள பெரிய மனிதர்களை எல்லாம் சந்திக்கிற வாய்ப்புப்பெற்றிருந்தேன் என்றாலும், அண்ணல் காந்தியடிகளையும், மகாகவி தாகூர் அவர்களையும் சந்திக்கும் பேற்றினைப் பற்றித்தான், ஐயத்திற்கிடமின்றி என் மனதில் போற்றிவருகிறேன். கடந்த கால் நூற்றாண்டுகளில், இவ்விரு சான்றோர்களும், உலகம் கண்ட "மாமனிதர்கள்" என்றே நான் கருதுகிறேன். களம் கண்ட தளபதிகள், சர்வாதிகாரிகள், கூச்சலிடும் அரசியல்வாதிகள் போன்றவர்களெல்லாம் காலப் போக்கில் மக்களால் மறக்கப்பட்டவர்களாகிவிடுவார்கள்; ஆனால், இவ்விரு சான்றோர்களும் அவ்வாறில்லாமல், காலத்தால் அங்கீகரிக்கப்பட்டவராவார்கள், வாழ்ந்து காட்டினார்கள் என்றே நான் பெரிதும் நம்புகிறேன். நாம் அடிமையுற்றிருக்கின்ற இக்காலகட்டத்தில் இக்காரணத்தினாலேயே, இவ்விருவரையும் சமகாலச் சான்றோர்களாக இந்தியத் தாய் நமக்கு அருளியிருக்கிறாளோ என நான் வியப்பிலாழ்கிறேன். அன்றைய காலம் தொட்டு இன்றைய நாள் வரையில், இதுபோன்ற வியத்தகு மகான்களின் தோற்றம் என்பது நம்நாட்டின் ஜீவனாகத் தொடர்ச்சியாக இருப்பதாலேயே தற்பொழுது நிகழும் துயரச் சம்பவங்கள் கூட அற்ப சொற்பமான, முக்கியத்துவமற்றவைகளாகவே எனக்குத் தோன்றுகின்றன.

இவ்விரு மகான்களின் சிந்தனைகள், உலகளாவியவைகளேயன்றி, சொந்த நாட்டு அளவில் குறுகியவைகளன்று. எனினும், இவ்விருவர்களும் நூற்றுக்குநூறு இந்தியத்தாயின் தவப்புதல்வர்கள்; பாரம்பரிய வழித்தோன்றல்கள்; நம்நாட்டின் நீண்டகாலப் பாரம்பரியக் கலாச்சாரத்தைப் புலப்படுத்துகின்ற பிரதிநிதிகள் என்றே என்னால் கருதமுடிகிறது. தங்களுடைய, உலகளாவிய விரிந்த ஞானத்திற்கிடையே, இவ்விருவரும் இந்தியத் திருப்புதல்வர்களாகவே தங்களை அடையாளம் காட்டிக் கொண்டார்கள் என்பது வியப்புக்குரியதல்லவா?

இவ்விரு மகான்களையும் ஒப்பிடுவதும், வேறுபடுத்திக் காட்டுவதும் மகிழ்ச்சிக்குரியதாகும். மேல்தட்டுக் கலைஞரான தாகூர் அவர்கள் கீழ்த்தட்டு மக்களின் அனுதாபியாக, ஜனநாயகவாதியாகப் பரிணமித்தவர்; பாடல், நாடகம் போன்றவற்றின் மூலம் நம் பாரத நாட்டின் கலாச்சாரப் பண்பாட்டினை வாழ்வியலில் பின்பற்றிட வேண்டுமென வலியுறுத்திய பிரதிநிதி. ஆனால், காந்தியடிகள், ஒரு சராசரிக் குடிமகனாக, விவசாயிகளின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக, பாரதத்தின் பழம்பெரும் கலாச்சாரத்தின் பிரதிநிதியாக, சுயநலப் பற்றற்ற துறவியாகவே இருந்தார். தொடக்கத்தில் தாகூர் அவர்கள் சிந்தனாவாதியாக இருந்த காலகட்டத்தில், காந்தியடிகள், ஓய்வு ஒழிவற்ற தீவிரச் செயலாக்கவாதியாகவே இருந்தார். வழிமுறை வெவ்வேறானதாக இருந்தாலும் இவ்விருவருமே உலகளாவிய கண்ணோட்டம் கொண்டவர்களாகவும், அதே நேரத்தில் முழுமையான பாரதப் புதல்வர்களாகவுமே இருந்தனர்; இந்திய நாட்டின் சான்றாண்மையை ஒற்றுமையை வலியுறுத்துகிறவர்களாகவே செயல்பட்டனர்.

பாரதத்தாயின் பண்டையகாலப் பன்முகக் கலாச்சாரக் கோணங்கள், சமகாலச் சான்றோர்களாகிய இவ்விரு மாமனிதர்களால் பேணப்பட்டது என்பதை நான் நினைவு அடிக்கடி கூர்ந்து மகிழ்வதுண்டு.

- இரா. செளமியனிலவல்

# தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம்

'தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் இயங்கும் ஒரு மாநில அளவிலான கூட்டுறவு அமைப்பு. இவ்விணையம் தமிழகத்தின் பனைத் தொழில் மற்றும் பனைத்தொழி லாளர்களின் நலனையும், பனைத் தொழில் தொழில்நுட்ப வளர்ச்சியையும், பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

இந்த இணையம் 22 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இது தவிர தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, பெரியார் மற்றும் தருமபுரி என்ற மாவட்ட அளவிலான சம்மேளனங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புகள் அரசின் தொழில் நிதியுதவிகளையும் தொழில் கடன்களையும், தொழில்நுட்பகருவிகளையும், பனைத்தொழிலாளர் களுக்குப் பெற்றுத் தருகின்றன. தமிழகமெங்கும் 1008 இயங்கும் நிலையிலான பனைத்தொழில் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் பனைத்தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

தமிழகமெங்குமுள்ள பனைத்தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களாகிய பனைவெல்லம், பனைஓலைப் பொருட்கள், பனைநார் பொருட்களைத் தமது பகுதி அல்லது அருகாமையிலுள்ள ஆரம்ப பனைத்தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு நியாயமான விலைக்கு விற்பனை செய்கின்றனர். இந்தப் பொருட்களை சேகரித்திடும் பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்கள் அவற்றை மொத்தமாக விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 1997-98ஆம் ஆண்டில் உற்பத்தி, விற்பனை மேற்கொள்ளப்பட்ட பனைப்பொருட்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| உற்பத்தி | : | 14,910 |
| விற்பனை | : | 15,960 |
| வேலைவாய்ப்பு அடைந்தோர்கள் எண்ணிக்கை | : | 10.40 இலட்சம் நபர்கள் |
| தொழிலாளர்கள் பெற்றகூலி விவரம் | : | 11,300.75 இலட்சம் |

தற்போது தமிழக பனைத்தொழிலில் பெரிதும் வருவாய் தரக்கூடியதும், தென் தமிழகத்தின் பெரும்பாலான பனைத்தொழிலாளர்களுக்கு பொருளாதார மேம்பாடு தரத்தக்கதாகவும் உள்ள தொழில் பனந்தும்பு தயாரித்தல் ஆகும். இந்த பனந்தும்பு பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு கணிசமான அளவு அன்னிய செலாவணி ஈட்டப்படுகிறது. 1997-98ஆம் ஆண்டு 126.220 மெட்ரிக் டன் அளவு தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.38.65 இலட்சங்கள் ஆகும்.

இந்த பனந்தும்பு இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், இஸ்ரேல், பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இத்துடன் ரூ.2.29 இலட்சம் மதிப்புள்ள பனைஓலைப்பொருட்களும் வெளிநாடு களுக்கு வர்த்தகத்தில் பங்கு பெற்றுள்ளது.

பனைத்தொழில் தொழிலாளர்களால் செய்யப்படும் பனைத்தொழில் உற்பத்திப் பொருட்களையும், விற்பனை செய்யவும், பனைத் தொழிலாளர்களின் பெண்கள், பனைமரம் பருவமற்ற காலங்களிலும் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் அரசின் 1997-98ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ. 7.50 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு 50 பெண்களுக்கு 'மினிபாம்சிராப்ட்டுகள்' என்னும் விற்பனை நிலையங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது

மாநில இணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மூன்று பனஞ்சர்க்கரை தயாரிக்கும் ஆலைகள் மத்தூர், கடப்பாக்கம், மாதவரம் மற்றும் கோவை-ஈரோடு

மாவட்டத்தில் உள்ள சலிக்க நாயக்கன் பாளையம் பனஞ்சீனி ஆலைகள் நல்ல முறையில் செயல்பட்டு பனஞ்சீனி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சர்க்கரை ஆலைகளில் ஆலை ஒன்றுக்கு 25 நபர்கள் வீதம் 100 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்து வருகிறார்கள். மேற்படி ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பதநீர் இறக்குதல் மற்றும் பாகு காய்ச்சிடுதல் போன்ற பணிகளுக்கு ஆலை 1க்கு 150 நபர்கள் வீதம் 4 ஆலைகளுக்கு 550 நபர்கள் பருவகாலங்களில் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்து வருகின்றார்கள்.



1998-99–ஆம் ஆண்டில் அரசின் பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ.2 இலட்சம் அனுமதிக்கப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் கிளையில் பனங்கன்றுகள் நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் 200 பனைத்தொழில் வல்லுனர் குடும்பங்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1998-99ஆம் ஆண்டு அரசின் பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டு மாநில இணைய கட்டுப்பாட்டில் பட்டுக்கோட்டையில் ஒரு தென்னந்துடைப்பம் அலகும், கோவை ஈரோடு மாவட்ட சம்மேளன கட்டுப்பாட்டில் பொள்ளாச்சியில் ஒரு தென்னந்துடைப்பம் அலகும் ஆரம்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் 1998-99ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ.3 இலட்சம் அனுமதிக்கப்பட்டு மாநில இணைய குளச்சல் கிளையில் ஒரு தென்னந்தும்பு உற்பத்தி மையம் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், மாநில இணையத்தின் வளர்ச்சிக்காக கூட்டுறவு வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

1. இந்த கடன் நிதியின் மூலம் (1) மாதவரம், (2) கடப்பாக்கம் (3) மத்தூர் ஆகிய மூன்று சீனிஆலைகள் இயங்கி உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு ரூ.10 இலட்சமும்;
2. திருச்செந்தூர் கிளையில் கற்கண்டு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ரூ.5 இலட்சமும்;
3. ஸ்ரீவில்லிபுத்தூர் கிளையில் பனைத்தொழில் ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.5 இலட்சமும்;
4. **தங்களிகுப்பம் ஈச்சங் கசங்கு கூடைகள் உற்பத்தி செய்யும் பணிக்காக ரூ.5 இலட்சமும் பயன்படுத்தப் பட்டுள்ளன.**

தமிழ்நாடு அரசு ''இந்திரா அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ்'' பனைத்தொழிலாளர்களுக்கு இலவசமாக 500 வீடுகட்டி தரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இத்திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 1998-99ஆம் ஆண்டில் மாநில இணையத்தின் மூலம் பனைத்தொழில் உற்பத்தி ரூ.149.10 இலட்சம் ஆகவும், விற்பனை ரூ.159.60 இலட்சம் ஆகவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதன்மூலம் 10.90 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட முடியும். □

# எங்கள் ஊர் பிரச்சினை

● பிரச்சினை :

**எ**ங்கள் ஊர் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, அரசிராமணி பேரூராட்சியைச் சேர்ந்த எல்லப்பாளையம் ஆகும். பச்சபாளியூர், சுரட்டுப்பாளையம், குறுக்குப் பாறையூர், கல்லம்பாளையம் ஆகிய ஊர்கள் எங்கள் பகுதியைச் சேர்ந்தவை. இங்கு 5000 மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். எங்கள் ஊருக்குச் செல்ல கப்பி ரோடு உள்ளது. அது மிகவும் பழுதடைந்து மிக மோசமாக உள்ளது. நாங்கள் எங்கு சென்றாலும் 5 கி.மீ. நடந்தோ அல்லது சைக்கிளிலோதான் செல்லவேண்டும். பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணிப் பெண்கள், உடல் நலம் சரியில்லாதவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே! எங்கள் ஊருக்குத் தெற்கில் ஆ.ரெட்டிப்பாளையம் முதல் எல்லப்பாளையம் வரை தார்ச்சாலை அமைத்துக் கொடுத்து, பேருந்து வசதி செய்து, எங்களின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்க, தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**– ஊர்ப் பொதுமக்கள்,**
**எல்லப்பாளையம்.**

**தீர்வு :**

*சேலம் மாவட்டம் அரசிராமணி பேரூராட்சி எல்லப்பாளையம் முதல் குறுக்குப்பாறையூர் வரை தார்ச்சாலை அமைக்கும் பணி, ரூ.3.18 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றதென்றும், தற்போது தார்போடும் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணி விரைவில் முடிக்கப்படும் எனப் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.*

*மேலும் கல்லம்பாளையம் பகுதியில் ஜல்லி சாலை அமைக்க நகர்ப்புறக் கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தில் மேற்படவுள்ளது என்றும், மீதம் உள்ள இதர பகுதியில் 1999 – 2000 ஆண்டு நிதி ஒதுக்கீட்டில், சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார் எனப் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.*

**– உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்),**
**சேலம் மண்டலம், சேலம்.**

● பிரச்சினை :

**தி**ருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மாத்தூர் ஊராட்சியில் அடங்கியுள்ள சின்னமாத்தூர் கிராமத்தில் பல பகுதிகள் உருவாகிச் சில ஆண்டுகளாக ஆயிரக்கணக்கில் மக்கள் குடியேறி, நாளுக்கு நாள் குடியிருப்புக்கள் வளர்ச்சியடைந்த போதும், கீழ்க்கண்ட வசதிகள் இன்றி மக்கள் பெரிதும் அல்லல்படுகின்றனர்.

சாலை வசதிகள் இல்லாததால், மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். மேலும் மழைக் காலங்களில் சேறும் சகதியுமாகக் காட்சியளிப்பது மட்டுமன்றி, மழைத்தண்ணீர், மேடு–பள்ளங்களில் தங்கிவிடுவதால், மக்கள் வெளியில் நடமாடக்கூட இயலவில்லை.

பகுதியில் தெருவிளக்கின்றி, இரவில் காரிருள் சூழ்ந்து கிடக்கின்றது. அவசரக்காலங்களிலும், ஏதாவது அசம்பாவித நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலோ இருளில் பாதுகாப்பாகச் செயல்பட இயலாமல் மக்கள் தவிக்கின்றனர்.

இப்பகுதியில் வாழும் மக்கள் குடிநீருக்காக, நிலத்தடி நீரையே நம்பிக்கொண்டு, கிணறுகளையும் நீரூற்றுக் குழாய்களையும் பயன்படுத்தி வருகின்றனர். கோடைக்



காலங்களில், நிலத்தடி நீர் வற்றி விடுவதால் கிணறுகளிலும், நீரூற்றுக் குழாய்களிலும், தண்ணீரின்றிச் சேறு கலந்த நீரே கிடைக்கின்றது. சில சமயங்களில் அவசியத்திற்காக சேறு கலந்த நீரையே வடிகட்டிப் பயன்படுத்துவது மிகவும் கவலைக்குரியதாகும். மேலும், இப்பிரச்சினையைத் தீர்க்க மேல்நிலை குடிநீர்த் தேக்கம் கட்டி முடித்தும் இணைப்பின்றித் தவிக்கின்றனர்.

பகுதியில் வாழும் மக்கள் அரசினரால் வழங்கப்படும் உணவுப் பொருட்களை வாங்க, சுமார் 5 கி.மீட்டர்

தூரத்தில் உள்ள உணவுப் பங்கீட்டுக் கடைக்குச் செல்லவேண்டிய நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. இந்நிலை மாற்றி, அரசு அறிவித்தது போன்று 700 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகளுக்கு மேல் உள்ள— எங்கள் பகுதிக்கு, குறுகிய தூரத்தில் பகுதியின் – எல்லைக்குள் உணவுப் பங்கீட்டுக் கடை அமைத்தல் நலமாகும்.

பகுதியில் உள்ள வயது முதிர்ந்த ஆடவர் – பெண்டிர் பள்ளிச் சிறுவர், சிறுமியர், கல்லூரி மாணவர், மாணவியர், உடல் ஊனமுற்றோர், அரசு அலுவலர்கள், ஆலைத் தொழிலாளிகள், உடல் நலிவுற்று மருத்துவ மனை செல்வோர், திடீரென ஏற்படும் கலவரம் போன்றவைகள் ஆகிய அனைத்திற்கும் நீண்ட தூரத்தில் உள்ள பேருந்து நிலையத்திற்குச் செல்லவேண்டி உள்ளதால், பகுதியின் வழியாக (சின்னமாத்தூர்) பேருந்து தடம் அமைக்க ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் மக்களுக்கு மிக அத்தியாவசியமானவைகளாகும்.

இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பகுதி வார்டு உறுப்பினர் என்ற முறையில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**– இரா.குகன்**
**3 வது வார்டு உறுப்பினர்,**
**மாத்தூர் ஊராட்சி, சென்னை.**

**தீர்வு :**

*புழல் ஊராட்சி ஒன்றியத்தில் மாத்தூர் ஊராட்சியில் அடங்கியது சின்ன மாத்தூர் என்ற குக்கிராமம். இது நகர்புறத்தை ஒட்டிய பகுதியாகும். இப்பகுதியில் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் விளை நிலங்களாக இருந்த பகுதிகளை அங்கீகாரம் பெறாத வீட்டுமனைகளாக மாற்றிக் குறைந்த விலையில் விற்றுள்ளனர். அதனால் இப்பகுதியில் நிறையக் குடியிருப்புகள் தோன்றியுள்ளன. மேலும், அருகாமையில் நிறையத் தொழிற்கூடங்கள் அமைந்துள்ளதால் நடுத்தர வர்க்கத்தினர் அநேகம் பேர் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியேறி உள்ளனர். இப்பகுதி மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற சென்னை பெருநகரக் குழுமத்திற்கு புதிய நகர்ப்பகுதி குடியிருப்போர் சங்கங்கள் மூலம் அணுகி ஆவன மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருசில அடிப்படை வசதிகள் குறித்தான கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதனையும் சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர்க்கு விசாரணையின்போது தெரிவிக்கப் பட்டதுடன் அன்னாரிடமிருந்து அதற்கான நன்றி தெரிவிக்கும் கடிதம் பெறப்பட்டதை இத்துடன் தங்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.*



**– கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**புழல், சென்னை.**

**மனுதாரரின் கடித நகல்**

மாத்தூர் ஊராட்சிக்குட்பட்ட – சின்னமாத்தூர் கிராமத்தில் மக்களுக்கு, அத்தியாவசிய தேவையான சாலைகள், குடிதண்ணீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் பிறவசதிகள் குறித்தும், மாத்தூர் ஊராட்சி மன்றத்தின் சார்பாக, அதன் உறுப்பினர்களாகிய நான் அரசின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, அரசு இதழான 'தமிழரசு' பத்திரிகையில், 'எங்கள் ஊர்ப் பிரச்சினை' பகுதிக்கு, செய்தி கொடுத்திருந்தேன்.

அச்செய்திகள் மீது கனிவு கொண்டு, அரசும், அதிகாரிகளும் உடன்நடவடிக்கை மேற்கொண்டு, சின்னமாத்தூர் கிராமப் பகுதி முழுமைக்கும், தார்ச்சாலைகள், குடிதண்ணீர்க் குழாய்கள், தெருவிளக்கு மற்றும் இதர வசதிகள் செய்து தர அரசு முன்வந்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுவது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

ஏற்கெனவே, சின்னாமத்தூர் பகுதியில்—மாத்தூர் ஊராட்சி மன்றத்தின் மூலம், பகுதிகளில் அமைத்த செம்மண் சாலைகளையும், தார் சாலைகளாக மாற்றித்தருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், ஊராட்சி மன்றத்தின் மூலம் நான் விடுத்த கோரிக்கையினை ஏற்று, அரசும், அதிகாரிகளும் கவனத்தில் கொண்டு, தீவிர உடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு, மாத்தூர் ஊராட்சி மன்றத்தின் மூலம் 1998–99ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் செயலாக்க – தொடக்கவிழா நடத்தியமைக்கும், விரைவில் திட்டப்பணிகள் தொடங்க இருப்பதற்கும் கனிவுடன் எனது நன்றியினை ஊராட்சி மன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

● **பிரச்சினை :**

திருவாரூர் மாவட்டம்–நீடாமங்கலம் வட்டம், நடுப்படுகை கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் கிராமச்சாலையின் முடிவில் மூன்று ஆத்துப் பிரிவு கோரையாறு அணைக்கட்டு (குலைப்பு) உள்ளது. அது பொதுப்பணித்துறையின் கண்காணிப்பில் உள்ளது. கடும்

மழைக்காலத்தில் அச் சாலை குண்டும் குழியுமாக மாறி, அவசரத் தேவைக்கு எந்த ஒரு வாகனமும் வர மறுக்கிறது. டாக்சி போன்றவை வருவது இல்லை. எனவே அச்சாலையின் பழுதுகளை நீக்கி சரிசெய்து, போக்குவரத்துக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் தலைப்பு என்னும் இடம் ஒரு சுற்றுலா இடம்போல் உள்ளதால், வெளி மாநிலத்திலிருந்து வருபவர்களும் சாலை சரியாக இல்லாததால் வருவது இல்லை. எனவே இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**– பொதுமக்கள் சார்பாக,**
**ஏ.பிரபாகரன். நடுபடுகை கிராமம்,**
**நீடாமங்கலம் வட்டம், திருவாரூர்.**

**தீர்வு :**

நீடாமங்கலம் ஒன்றியம் நடுபடுகை கிராமம் கோரையாறு தலைப்பு சாலை 1998–99ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத் நிதியிலிருந்து 2.6 கி.மீ. ரூ.11.09 இலட்சத்தில் மேம்பாடு செய்திட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வேலை துவக்கப்பட உள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– ம.ரா.மோகன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,**
**திருவாரூர்.**

● **பிரச்சினை :**

இராமநாதபுரத்தில் வசித்து வரும் நகரவாசிகள் அனைவருக்கும் சொந்தமான சுடுகாட்டின் அருகாமையில் உள்ள இந்திராநகர் எங்கள் ஊராகும். மறைந்த தலைவர் மாண்புமிகு காமராஜர் அவர்கள் எங்களது இல்லங்களை நான்கு வரிசையாகக் கட்டி முடித்துவிட்டு, முதல் மூன்று வரிசைகளுக்கு ரோடு வசதியும் செய்துவிட்டார். நான்காவது வரிசைக்குப் பின்னால் ஒரு ஊரணி உள்ளது. அந்த வரிசையில் மட்டும் ஊரணி தூர்வாரச் செய்த பின்பு கடைசி ரோட்டை உயரமாகச் செய்து தருகிறோம் என்று சொன்னார்கள், 30 ஆண்டுகள் ஆகியும் ரோடு போட்டபாடு கிடையாது. நாங்கள் ஒவ்வொரு மழைக் காலங்களிலும் நீந்தித்தான் செல்கின்றோம். குழந்தைகள் எத்தனையோ பேர்கள் பலியாகி உள்ளார்கள். எனவே, தாங்கள் எங்களின் இந்தப் பெரும் பிரச்சினையை தயவுசெய்து வரும் மழைக்காலத்திற்கு முன்பாகத் தீர்த்துவைத்து ரோடு வசதி செய்து தருமாறு பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

**– பொது மக்கள்,**
**இந்திரா நகர்,**
**வெளிப்பட்டணம் அஞ்சல்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**தீர்வு:**

*இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டணம் அஞ்சல், கருவிக்காரத் தெரு, இந்திரா நகர் 4–வது குறுக்குத் தெருவிற்குச் சாலை அமைத்துக் கொடுக்க மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நகராட்சிக்கு 1998–99 ஆம் ஆண்டில் மாநில நிதிக்குழுப் பரிந்துரைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் இந்நகரமன்றத் தீர்மானத்தில் இப்பகுதியில் சாலை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*மேலும் 19.06.98ல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தற்போது பணி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட பணி விரைவில் முடிக்கப்பட்டு விடும்.*

**– நகராட்சி ஆணையாளர்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

● **பிரச்சினை :**

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், செம்பொனார் கோவில் ஊராட்சி மன்றத்தின் மின்விளக்குக் கம்பங்களில் குழல் விளக்கு பொருத்தப்பட்டு எரிந்து கொண்டுள்ளன. குழல் மின்விளக்கிற்குப் பதில் பிரதான சாலையில் உள்ள மின் கம்பங்களில் ஐந்து 70 வாட்ஸ் சோடியம் வேப்பர் ஊராட்சி தீர்மானபடி பொருத்தியுள்ளேன். மேற்படி சோடியம் 70 வாட்ஸ் மின் விளக்கைப் பொருத்த மின்வாரியத்திற்கு ஒரு விளக்கிற்கு ரூ.400/– வீதம் செலுத்தவேண்டும் என்று எங்கள் பகுதி மின்வாரிய உதவி செயற்பொறியாளர் வாய்மொழி மூலம் கூறியுள்ளார். ஓடுகின்ற மின்சாரத்திற்கு யூனிட் கணக்குப்படி ஊராட்சியிலிருந்து தொகை செலுத்துகிறோம். அப்படி இருக்கும்போது 70 வாட்ஸ் சோடியம் விளக்கிற்கு ரூ.400/– கட்டவேண்டியது அவசியம்தானா? இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தெளிவுப் படுத்த அன்புடன் வேண்டுகிறேன்.

**– சி.சி.கணேசன்**
**தலைவர், ஊராட்சி மன்றம்,**
**செம்பொனார் கோவில், நாகப்பட்டினம் மாவட்டம்.**



தீர்வு :

சோடியம் விளக்கு புதிதாக அமைப்பதாக இருப்பினும் அல்லது மாற்றுவதாக இருந்தாலும் அந்தப் பணிக்குரிய மதிப்பீட்டுத் தொகை முழுதும் செலுத்த வேண்டிய 'டி.சி.டபிள்யூ' அடிப்படையில்தான் மேற்கொள்ள வேண்டும் என்று வாரியத்தின் மேலிட உத்தரவு Lr. No. SE/RE&I(D) /RE2/F.CO/142/ D.No.1181/92-97/Dt.30.7.97

இந்த முறையில் தளவாடப் பொருள்கள் சம்பந்தமில்லை எனினும் மேம்பாட்டுத்தொகை ரூ.300ம், பணி மேற்கொள்ள ரூ.100 ஆக ரூ.400 வசூலிக்கப்படுகிறது. இதுவும் வாரியத்தின் Terms and Conditions படியாகும் என்பதனை இதன் மூலம் தங்கள் கவனத்திற்கு அளிக்கிறேன்.

**– மேற்பார்வை பொறியாளர்,**
**மின்பகிர்மான வட்டம்,**
**நாகப்பட்டினம்.**

● பிரச்சினை :

எங்கள் கிராமத்தில் குடிநீர் தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. பெயருக்குக் குடிதண்ணீர் வசதி இருக்கும். ஆனால், பொது மக்களுக்குப் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. புவனகிரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்குப் பலமுறை கிராமப் பொதுமக்கள் எங்கள் சங்கத்தில் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. குடிதண்ணீருக்கு அருகில் உள்ள விவசாய பாசனத்தில் மோட்டார் மூலம் சில நபரும் தண்ணீர் பிடிக்கின்றார்கள்.

எங்கள் கிராமத்தில் தெருவில் மின் விளக்கு இல்லாமல் போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன. இதனைச் சரிசெய்து நல்ல முறையில் பராமரிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் கிராம சாலை மழைநீர் மற்றும் கழிவு நீர் போக்குவரத்து இல்லாமல் சாக்கடை தேங்கிக் காணப்படுகிறது. இதனால் காலாரா மற்றும் பலவித நோய்களால் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, கிராமச் சாலை ஓரம் சாணல் வெட்டி கழிவுநீர் செல்ல வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



எங்கள் கிராமச்சாலை மழைக்காலங்களில் சேறாக அமைந்துள்ளது. இதனால் போக்குவரத்து பாதிக்கின்றது. ஆகவே சாலையைச் சீர்திருத்தம் செய்து தார் போட்டுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எங்கள் கிராமப் பேருந்து நிலையத்தில் நிழற்குடை இல்லை. இங்கு சுமார் 50 கிராமப் பொது மக்கள் எங்கள் கிராமத்திற்கு வந்து நெய்வேலி மற்றும் வெளியூர் செல்ல வருகிறார்கள். பயணிகள் அமர்வதற்கு நிழற்குடை கிடையாது. ஆகவே, எங்கள் கிராமத்தில் நிழற்குடை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**– இரா. பழனிவேல்,**
**தலைவர், மேல்வளையமாதேவி,**
**சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்.**

தீர்வு :

*மேல்வளையமாதேவி கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி உள்ளது. 1.4.97 முதல் குடிநீர் பராமரிப்பு ஊராட்சி மன்றத் தலைவரின் கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது. மேல்வளையமாதேவி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சீர்செய்யப்பட்டு, தற்போது நன்றாக இயங்கிவருகிறது. ஊராட்சி மன்ற தலைவரால் பைப்லைன் விஸ்தரிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவரால் புதியதாக 3 கைப்பம்புகள் இயங்கிவருகின்றன. எனவே குடிநீர்ப் பிரச்சினை இல்லை.*

*தெருவிளக்குகள் ஊராட்சி மன்றத் தலைவரால் வாங்கிப் பொருத்தப்பட்டு எரிகின்றது. மெயின் சாலையில் 1 சோடியம் மற்றும் 4 டியூப் லைட்டுகள் எரிகின்றது. அவ்வப்போது எரியாத விளக்குகள் ஊராட்சி மன்றத் தலைவரால் மாற்றி எரிய வைக்கப்பட்டு வருகிறது.*

*கழிவுநீர் கால்வாய் மற்றும் பேருந்து நிழற்குடை அமைப்பதற்கு தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லை.*

*எனவே, 1999–2000ஆம் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்திட தலைவர்க்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் நிதிவசதிக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.*

**– கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**மேல் புவனகிரி.**

★ ★ ★

# பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலத்துறையில் இடம் பெறும் பல்வேறு நலத் திட்டங்களில் பெண்களுக்காகப் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிப்பது என்பது முக்கியமான பணியாகும்.

இக்கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம் குடும்ப வருடவருமானம் ரூ.12,000—க்கும் குறைவாக, அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிப்பதாகும்.

இக்கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் யாவும் அரசு சார்ந்த திட்டங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் நிலையான சந்தை வாய்ப்பு/வருமானம் பெற்று வருகின்றனர்.

**மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்**

| | |
|---|---|
| மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 78 |
| ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 26 |
| சாக்குக்கட்டி தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டறவுச் சங்கங்கள் | 6 |
| எழுதுபொருள் தயாரிக்கும் பெண்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 20 |
| இதர சங்கங்கள் | 7 |
| மொத்தம் | 137 |

### *தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்*

சமூக நலத்துறையின் கீழ், 78 மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் 36,657 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். சத்துணவுத்திட்டத்தின் மூலம் பயனடையும் 1 முதல் 8—ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ—மாணவியர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் பயிலும் மாணவ—மாணவியர் ஆகியோருக்கு வழங்கப்படும் சீருடைகள் இந்த 78 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.



இதற்கென, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தானியங்கித் துணி வெட்டும் கருவிகளை அரசு இலவசமாக வழங்கியுள்ளது. துணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துணி வெட்டும் மையத்தில் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட துணிகளைச் சீருடைகள் தைப்பதற்காக இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

1997—98ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ.426.30 இலட்சம் தையல் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான துணிப் பைகள்/விவசாயத் துறைக்குத் தேவையான துணிப்பைகள் மற்றும் இதர வகைகளில் ஆர்டர்கள் பெற்று அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

### *ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்)*

ஆறு மாதங்களுக்கு மேல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள மையங்களுக்குத் தேவையான இணை உணவுகள்,



அனைத்துப் பதிவேடுகளும் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பதிவேடுகளும் இச்சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இச்சங்கங்களில் சுமார் 1038 மகளிர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு 1997–98ஆம் ஆண்டில் ரூ.7.23 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

26 இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. 1997–98ஆம் ஆண்டு 8,664 மெட்ரிக் டன் சத்துணவு தயாரித்து வழங்கியதற்கு சுமார் ரூ.47.47 இலட்சம் இச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1,660 மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளை உலக வங்கி, ஸ்வீடன், சர்வதேச நிதி உதவி நிறுவனம், இந்திய அரசு மற்றும் தமிழக அரசு ஆகியவை அளித்து வருகின்றன.

### *சாக்குக்கட்டி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்*

இத்துறையின் கீழ் தற்பொழுது 6 சாக்கட்டி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 172 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 1997–98ஆம் ஆண்டில் ரூ.0.18 இலட்சம் கூலியாகச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

### *எழுது பொருள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்*

இத்துறையின் கீழ் 20 எழுது பொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 13 கூட்டுறவுச்சங்கங்களுக்கு தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அச்சு இயந்திரம் மற்றும் காகித உறை தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை அரசு செலவில் வழங்கப்பட்டன. மதிய உணவு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும்

### *இதர சங்கங்கள்*

தஞ்சை மாவட்டத்தில் நல்லூரிலும், திருநாகேஸ் வரத்திலும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. இதில் நல்லூரில் உள்ள சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்குக் கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் கீழ் உள்ள 3 உற்பத்தி நிலையங்கள் மூலம் தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் அவர்களைச் சங்கத்தில் உறுப்பினர்களாக்கி வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்தியக் கயிறு வாரியம் இச்சங்கத்திற்கு 20% தள்ளுபடியில் விற்பனை செய்ய ஊக்கம் அளித்து வருகிறது. இவ்வாரியம் சங்கத்தின் இருப்பிடமாக நல்லூரில் மாதிரி கயிறு கிராமம் அமைக்கத் திட்டமிட்டு ரூ.2.95 இலட்சம் வழங்கியுள்ளது. மேற்கண்ட இரண்டு கயிறு சங்கங்களில் 993 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 1997–98ஆம் ஆண்டில் ரூ.3.07 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, மேலும் 5 சங்கங்கள் வேறு சில தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளன. அவைகளின் ஒட்டு மொத்தச் செயல்பாடுகளில் முன்னேற்றம் வேண்டி யிருப்பதால் அவைகளின் செயல்பட்டை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600 002. தொலைபேசி:568926, 568927, 564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






